தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

வருடாந்த அறிக்கை

2019

எமது நோக்கு

"தெங்குக் கைத்தொழிலின் மொத்தத் தேசிய
உற்பத்திக்காக பெருந்தோட்டக் கைத்தொழில் துறை
ஊடாக உயரிய பங்களிப்பை வழங்குதல் மற்றும்
உற்பத்தி, விற்பனை பல்வகைத் தன்மையின் போது
கோளமய தலைமைத்துவதுடன் செயற்படல்."

எமது பணிக்கூற்று

மனைப் பயன்பாடு மற்றும் கைத்தொழிலிற்காக
தெங்கு மற்றும் தெங்கு உற்பத்தி விநியோகத்தை
உறுதிப்படுத்துவதன் மூலம் தெங்குக் கைத்தொழிலின்
நீண்டகால வர்த்தக உற்பத்தித் திறன், நீடித்த நிரந்தர
மற்றும் தேசிய பொருளாதாரத்திற்காக உயரிய
பங்களிப்பினை வழங்குவதற்காக வசதிகளை வழங்குதல்.

அறிமுகம்

மொத்தத் தெங்கு கைத்தொழிலின் அபிவிருத்திக்காக 1971 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தில் "தெங்கு அபிவிருத்தி அதிகார சபை எனக் கருதப்படும் (இதற்கு பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பிடப்படுவது) அதிகார சபை தாபிக்கப்பட வேண்டிய" ஆகிய 111 ஆம் பகுதியில் 24 வது வாசகத்திற்கு அமைய தாபிக்கப்பட்ட பிரதான நிலையியற் சபை நிறுவனம் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையாகும்.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிகள் சட்டத்தின் 30(1) வாசகத்திற்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

(அ) தெங்குக் கைத்தெழில் மற்றும் தெங்குச் செய்கையில் மேற்கொள்ளப்படும் காணி மற்றும் தெங்குச் செய்கைக்கான காணி பொருளாதார ரீதியில் பயன்படுத்துவது தொடர்பில் அபிவிருத்தி முன்னிலை தொடர்பாக தீர்மானம் எடுத்தல், அத்துடன் கொள்கைகளை வகுப்பதற்காக அமைச்சருக்கு உதவிகளை வழங்குதல்.

(ஆ) அவ்வாறு தீர்மானிக்கப்படும் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு செயற் திட்டங்கள் மற்றும் யோசனைத் திட்டங்களை வகுத்தல் அல்லது அமுல்படுத்துவதற்காக உதவுதல்.

(இ) அவ்வாறு தயாரிக்கப்படும் செயற்திட்டங்கள் மற்றும் யோசனை முறைகளை அமுல்படுத்தல் அல்லது அமுல்படுத்துவதற்காக உதவிகளை வழங்குதல்.

(ஈ) இச் சட்டத்தின் கீழ் அமைச்சரினால் தாபிக்கப்பட்டுள்ள சபைகளின் செயற்பாட்டு இணைப்புக்களை மேற்கொள்ளல்

(உ) சபைகளின் வருடாந்த வரவு செலவினை அங்கீகரித்தல் மற்றும் அவர்களுக்கு நிதியத்தை வழங்குதல்.

(ஊ) உரிய முகாமைத்துவ கணக்கீட்டு முறைகளை வகுப்பதனை அமுல்படுத்தல் மற்றும் முன்னெடுப்பதற்காக சபைகளுக்கு ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் உதவுதல்.

(எ) அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் சபைகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல்.

(ஏ) தெங்குக் கைத்தொழில் அல்லது அதன் உற்பத்தி தொடர்பில் ஏதேனும் ஒரு பிரிவு அல்லது தெங்கு செய்கை மூலம் மேற்கொள்ளப்படும் காணி அல்லது தெங்கு செய்கைக்காக காணியினை பயன்படுத்துவது தொடர்பில் விஞ்ஞான ரீதியிலான பரிசோதனையை மேற்கொள்ளும் எவரேனும் ஒரு நபருக்கு அல்லது சபைக்கு (கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத) நிதி மற்றும் ஏனைய எந்த முறையிலேனும் உதவிகளை வழங்குதல் மற்றும் அவ்வாறான ஆராய்ச்சி பணிகளின் இணைப்புக்களை மேற்கொள்ளல்.

(ஐ) அமைச்சரின் இணக்கப்பாட்டின் உரிமை மற்றும் பணிகளை நிறைவேற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்புகளை எட்டுதல்.

(ஒ) தெங்குக் கைத்தொழில் மீது தாக்கம் செலுத்தக் கூடிய அல்லது உரிய சகல விடயங்கள் தொடர்பிலும் அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

(ஓ) தெங்குக் கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மீள் உயிரூட்டுவதற்காக தேவையானது என அதிகார சபையினால் கருதப்படுகின்ற விடயங்கள் அனைத்தையும் அமுல்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்.

அதிகார சபையின் அதிகாரங்கள், சட்டத்தின் 31 ஆம் வாசகத்திற்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

31 (1) ஆம் அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவையானது என அல்லது பொருத்தமான அல்லது அது சார்ந்த சகல விடங்களையும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக அதிகார சபைக்கு அதிகாரங்கள் இருக்க வேண்டும்.

(2) (1) ஆம் உப வாசகத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்திட்டத்திற்குப் பாதிப்புக்கள் இன்றி 22 (2) ஆம் வாசகத்தின் மூலம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும் சபை மற்றும் சமமான அதிகாரம் சபைக்கு இருத்தல் வேண்டும்.

(3) அமைச்சரினால் பொருத்தமானது எனக் கருதப்படும் வேளையில் அவரினால் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் மேற்கொள்ளப்படும் உத்தரவின் மூலம் 23 ஆம் வாசகத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் வகுக்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்கள் மூலம் ஒன்று அல்லது பலவற்றின் அல்லது அதில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதியினை சபை மற்றும் சமமான முறையில் அதிகார சபைக்கு பொறுப்பளிக்க முடியும்.

தெங்குத் கைத்தொழில் துறை ஊடாக இலங்கை 2019 ஆம் ஆண்டில் 109 பில்லியன் ரூபாவிற்கு அண்மித்த அந்நியச் செலாவணியினை பெற்றுக் கொண்டுள்ளதோடு, தெங்கு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்களில் மொத்தத் தேசிய உற்பத்திக்கு வருடாந்தம் பாரிய பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதனால் இதுவரை பதிவு செய்யப்பட்ட அதிகூடிய ஏற்றுமதி வருமானமான ரூபா.109 பில்லியன் பெற்றுக்கொள்வதற்கு இயன்றுள்ளதுடன், அது 15% ஆன வளர்ச்சியாகும்.

அமைச்சினால் தெங்கு கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பில் பிரதான கொள்கைகளை இனங்கண்டு வகுக்கும்போது அதற்காக உதவி வழங்கும் பணிகளை மேற்கொளவ்தற்கு மேலதிகமாக தெங்குக் கைத்தொழில் செயற்பாடுகள் மற்றும் விற்பனைப் பிரிவினை அபிவிருத்தி செய்யும் போது, மேற்பார்வை செய்கையில் செயற்பாட்டுப் பணிகளை அமுல்படுத்துவதற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு, தர நிர்வாக மற்றும் தரப்பாதுகாப்புப் பிரிவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, நிதிப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு என 05 செயற்பாட்டுப் பிரிவுகளை கொண்டமைந்துள்ளதுடன் அவ்வப் பிரிவுகளுக்குப் பொறுப்பாகப் பணிப்பாளர்கள் செயற்படுகின்றனர். இப் பணிகளை மேற்கொள்ளும் போது பொறியியல் பிரிவு மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு மேற்கூறப்பட்ட பிரிவுகள் மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றன.

தலைவர், பிரதான நிறைவேற்று அதிகாரியாக செயற்படுவதுடன் அதிகார சபையின் பணிகளை வழிநடத்துதல், மேற்பார்வை மற்றும் பணிப்பாளர் சபையினால் வகுக்கப்படும் கொள்கைகளை மற்றும் வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவது பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு, தர நிர்வாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, நிர்வாகப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவின் பணிப்பாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இவ் அதிகார சபையின் அங்கீரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 259 பேர் ஆகும். 2019 ஆம் ஆண்டின் சேவையில் ஈடுபட்ட எண்ணிக்கை 200 பேர் என்பதுடன் இவ் ஊழியர்களில் 34 பேர் முகாமைத்துவ மட்டத்தில் உள்ளவர்களாகும்.

தலைவரின் மீளாய்வு- 2019

இலட்சக்கணக்கான இலங்கை வாழ் மக்கள் தமது நேரடியான மற்றும் நேரடியற்ற வருமான வழியாக தெங்கு மற்றும் அதனைச் சார்ந்த கைத்தொழிலை தெரிவு செய்துள்ளதால், பெருந்தோட்டக் கைத்தொழில் துறையில் தமது பெயரை தெங்கு தைதொழில் தக்க வைத்துக் கொண்டுள்ளது. கிராமிய மற்றும் நகரவாழ் என்று எல்லா வகுப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தி மனிதனின் சமூக, பொருளாதாரம் மற்றும் கலாசார நடவடிக்கைகள் தொடர்பில் தென்னைமரம் பாரிய இணைப்புக் கொண்டுள்ளது.

தெங்கு உள்ளீடு, தென்னம் மட்டை பயன்பாட்டுடன் தயாரிக்கப்படும் தும்பு நார் கயிறு, இறப்பர் சார்ந்த உற்பத்திகள் தும்பு சோறு, மற்றும் ஏனைய உற்பத்திகள் என்பவற்றில் கவனிக்கத்தக்க அளவிலான ஏற்றுமதிகள் மேறகொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தெங்கு சார்ந்த ஏற்றுமதியாளர்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றுக்கு அதிக போக்கினை காட்டுகின்றார்கள்.

ஏற்றுமதியில் அளவு ரீதியான வர்ச்சியினை பேணுதல் என்பது, அந்த உற்பத்திகளின் பொருட்டு சந்தையில் அதிக கோரிக்கை நிலவுகின்றது என்பதாகும். அதிக கோரிக்கை நிலவுதல் என்பது பொருட்களின் தரம், உற்பத்தி முறைமை மற்றும் பண்புசார் அம்சங்கள் சர்வதேச தரநியமங்களின்படி மேற்கொள்ளப்படுகின்றது என்பதாகும். சர்வதேச கொள்வனவாளர்கள் உள்நாட்டு தேங்காய்களின் ருசியில் விருப்பம் காட்டுதலும் இதற்கு பிரதான காரணமாகும்.

ஆகையால் குறித்த பணிகளை வெற்றிகரமாக வழிநடாத்தும் தெங்கு அதிகார சபை எப்போதும் மகிழ்ச்சியடைகின்றது. அதிகார சபையாக எமது அடிப்படை நோக்கம் யாதெனில், தெங்கு கைத்தொழிலின் ஏற்றுமதி வருமானத்தை ஆண்டுதோறும் அதிகரிக்கச்செய்வதுடன், இதுவரை தெங்கு தைதொழிலில் பெற்றுக்கொண்ட வருமானம் ரூபா. 109 பில்லியன் தொகையாகும்.

2019 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கையில் தெங்கு கைத்தொழிலின் ஏற்றுமதி வருமானம் எதிர்வுகூறல்களையும் விஞ்சி அதிகரித்துக் கொள்வதற்கு இயன்றுள்ளதுடன், அது இதுவரை பதிவு செய்யப்பட்ட அதிகூடிய ஏற்றுமதி வருமானமான ரூபா.109 பில்லியன் அல்லது ஐக்கிய அமெரிக்க டொலர் 610 மில்லியன் வரை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கு இயன்றமை தெங்கு சார்ந்த ஏற்றுமதி துறையில் குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.



எச்.கே.உதய ரூபசிங்க
தலைவர்

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு - 2019

முற்காலத்தில் கரையோரம் சார்ந்த பிரதேசங்களில் இருந்து நிலப்பகுதியை நோக்கி பரவலாக காணப்பட்ட பனை இனத்தைச் சார்ந்த தென்னை மரம் கொகஸ் நியுசிபெஃரா (Cocos Nucifera) எனும் விஞ்ஞானப் பெயரினால் அழைக்கப்படுகின்றது. இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கையுடன் நன்கு இணைந்துள்ள தற்காலத்தில் Tree of life அல்லது கப்ருக்க என்று அழைக்கப்படுகின்றது. இலங்கையின் 364000 ஹெக்டயார் அளவிலான நிலப்பகுதியில் பரவலாக உள்ள தென்னை மரம் இந்த நாட்டின் பிரதான பொருளாதார மூன்று பயிர்களில் ஒன்றாவதுடன், நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிகளவில் வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளது.

உலகத்தில் அதிகளவில் தேங்காய் உற்பத்தி செய்கின்ற நாடுகளான இந்தோனிஷியா, பிலிபைன்ஸ் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளுக்கு மட்டும் அவற்றை அடுத்துள்ளதுடன் இலங்கையில் வருடாந்த தெங்கு உற்பத்தி 3000 -3600 மில்லியன் காய்களாகும். மொத்த தெங்கு உற்பத்தியில் 60% அளவு வீடுகள் சார்ந்து நுகர்வதற்கும் எஞ்சிய தொகை தெங்கு உள்ளீடுகள் சார்ந்து ஏற்றுமதி கைத் தொழில்களான உலர்த்தப்பட்ட தேங்காய் பால் , தேங்காய் பால் மா, தேங்காய் க்ரீம், கொப்பறா மற்றும் காய் தேங்காய் என்பவற்றுக்காக தெங்கு கைத்தொழிலில் பயன்படுத்தப்படுகிறது.

நில அளவின்படி 56% ஆன தெங்கு முக்கோணத்தில் (குருணாகல், புத்தளம்,கம்பகா) அதிக தெங்கு அடர்த்தியும் காணலாம் என்பதுடன், அந்த பிரதேசங்களில் அதிக தெங்கு சார்ந்த கைத்தொழில்களும் மையமாகக் கொண்டுள்ளன. தற்போது வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைதீவு போன்ற மாவட்டங்கள் சார்ந்து இரண்டாவது தெங்கு முக்கோணத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேங்காய் இலங்கை வாழ் மக்களின் நாளாந்த உணவு முறையில் முதன்மையான இடத்தைப் பெற்றுக்கொள்வதுடன், நடுத்தர அளவிலான தேங்காய் ஒன்றில் 1405 கலரி அளவும்,கொழுப்பு 133 கிராமும் உள்ளது. அது சதவீதமாக ஒழுங்குமுறையில் 15% மற்றும் 70% ஆகும் . இதற்கு மேலதிகமாக 5% புரதச் சத்துள்ள தேங்காய் உள்ளீடுகளில் நார்சத்து அதிகமாவதுடன், கொலஸ்டரோல் அற்றதாகும்.

சரியான உணவு செயற்பாட்டு முறை ஊடாக இலங்கையில் மனைகள் சார்ந்து தேங்காய் நுகர்வதை குறைத்துக்கொண்டு மேலதிக தேங்காய்களை அதன் உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களின் பொருட்டு ஈடுபடுத்துவதனால், தற்போது விரயமாகும் தேங்காய் மட்டைகளையும் சிரட்டைகளையும் வினைத்திறனான முறை ஊடாக திரட்டப்பட்டு சுற்றாடலுக்கு நன்மை பயக்கும் வகையில் உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு தற்போது தெங்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோன்று சர்வதேச சந்தை தேவையினை அடையாளம் காணப்பட்டு அதற்கு பொருந்துகின்ற வகையில் தரத்துடன் கூடிய பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மக்களை ஊக்குவிக்கப்படுகிறது. வெளிநாட்டு சந்தையில் தெங்கு சார்ந்து இலங்கையின் நற்பெயரை மேலும் பேணிக்கொண்டு வெளிநாட்டு சந்தையினை விஸ்தரித்துகொள்வதற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை எப் போதும் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

இலங்கையில் உள்நாட்டு தெங்கு கைத்தொழிலை மேம்படுத்தல் மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை மேம்படுத்திக்கொண்டு போட்டியுடன் ஏற்றுமதி துறையை வெற்றிகொள்வதற்காக தெங்கு கைத்தொழிலில் புதிய மலர்ச்சியினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென நான் நம்புகின்றேன்.



ஏ.எச்.எல்.இ. காமினி விஜேசிங்க
பணிப்பாளர் நாயகம்

2019 சனவரி மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

1. திரு. எச்.கே. உதய ரூபசிங்க- தலைவர்
2. திரு. ஆர்.பி.அத்தநாயகன்க
3. திரு.எப்.தேவாசீர்வாதன்
4. திரு.எஸ்.பீ.ஜயரத்ன
5. செல்வி.டப்.எம் .வை.ரீ. பிரனாந்து
6. திரு. என்.எஸ்.வனசிங்க
7. திரு.ஆர்.எம்.டி.கே.நாமல் பண்டார
8. திரு. சமிந்த கமகே
9. திரு.அசோக பாதெனிய
10. திரு.எம்.உமா சந்திரன்
11. திரு.துஷார ரணசிங்க

தலைவர் உட்பட பிரிவுப் பொறுப்பாளர்கள்

1. திரு. எச்.கே.யூ.கே. ரூபசிங்க	-	தலைவர்
2. திரு. ஏ.எச்.எல்.டி. காமினிவிஜேசிங்க	-	பணிப்பாளர்நாயகம்
3. திருமதி. எஸ்.எஸ். புரசிங்க	-	பணிப்பாளர் (தரநிருவாகம்மற்றும்தரப்பாதுகாப்பு)
4. திருமதி. எஸ்.எஸ். ராஜகருணா	-	பணிப்பாளர் (நிருவாகம்) (2019.09.28 ஆந் திகதி வரை)
எஸ்.டப்.ரசிகா	-	பணிப்பாளர் (நிருவாகம்) (2019.09.29 ஆந் திகதி வரை)
5. திருமதி. எச்.பி. சந்தியாகாந்தி	-	பணிப்பாளர் (நிதி)
6. திரு. பி. எதிரிமான்ன	-	பணிப்பாளர் (செயற்பாட்டுஅபிவிருத்தி)
7. திரு. பி.ஏ.எஸ்.கே. சம்பத்சமரவிக்ரம	-	பணிப்பாளர் (விற்பனைஅபிவிருத்திமற்றும்ஆராய்ச்சி)

2019.12.31 ஆம் திகதியன்று ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



குறுகிய உள்ளீடுகள் :

1. சிரே. முகா. – சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம்
2. உ/பி பணிப்பாளர் – உதவி / பிரதிப் பணிப்பாளர்
3. மு. ம. – முகாமைத்துவ மட்டம்
4. உ. க. உ. – உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்
5. நி. உ. – நிர்வாக உத்தியோகத்தர்
6. பொ. அ. உத். – பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
7. செ. அ. உ. – செயற்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்
8. த. நி. உத்தி. – தர நிர்வாக உத்தியோகத்தர்
9. க. மு. ம. – கனிஷ்ட முகாமத்துவ மட்டம்
10. வி. அ. ம. ஆரா. – விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி
11. த. நி. ம. த. பா - தர நிர்வாகம் மற்றும் தரப் பாதுகாப்பு

உள்ளடக்கம்

அத்தியாயங்களின் இலக்கம்

செயற்பாட்டு அபிவிருத்திப்பிரிவு	01
தர நிர்வாகம் மற்றும் தரப்பாதுகாப்புப் பிரிவு	02
விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப்பிரிவு	03
நிருவாகப்பிரிவு	04
நிதிப்பிரிவு	05
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை	06
கணக்காய்வு அறிக்கை	07

1. செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு

தெங்கு சாா்ந்த கைத்தொழிலை மேற்பாா்வை செய்தல் மற்றும் தெங்குத் சாா்ந்த கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வதும் செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணியாகும். அதன் கீழ் 2019 ஆம் ஆண்டில் பிரதானமாக கீழ்க் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை மையமாகக் கொண்டு செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு தயாரிக்கப்பட்டுள்ளது.

1. உற்பத்திச் செயன்முறைகளைக் கண்காணித்தல் மற்றும் அடிக்கடி பரிசோதனை செய்வதன் மூலம் உள்நாட்டு மற்றும் சா்வதேச தரத்தினை நிலை நிறுத்துதல் மற்றும் பொருத்தமானவாறாக தயாரிக்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதிக்காக முன்னிலைப்படுத்துவதற்கு உதவுதல்.

2. உலா்த்தப்பட்ட தெங்கு கைத்தொழிலின் அபிவிருத்தி நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி மேற்கொள்ளாத காலப் பகுதிகளில் ஊழியா்களுக்கு வேதனங்களை செலுத்துவதற்காக ஆலை அபிவிருத்தி நிதியம்ஊடாக பங்களிப்பு வழங்குதல்

3. தெங்கு சாா்ந்த உற்பத்திக்கான செயற்பாட்டு மற்றும் மூலதன வசதிகளை வழங்குவதன் மூலம் உற்பத்தித் திறன், நன்மைகளை உயா்த்துதல் மற்றும் அலகொன்றிற்கான செலவினை குறைத்தல்.

4. தெங்கு சாா்ந்த கைத்தொழிலாளா்களுக்கு தேவையான வங்கி கடன் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டடல் மற்றும் வட்டி சலுகை வழங்குதல்.

5. தெங்கு சாா்ந்த உற்பத்திகளில் புதிய முன்னேற்றங்கள், தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சிகளுக்காக தூண்டல்களை ஏற்படுத்தல் மற்றும் திறன் மேம்பாட்டிற்காக உள்ளூா் மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பங்களுக்கு கைத்தொழிலாளா்களை ஈடுபடுத்தல்.

6. முறையற்ற கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக பங்களிப்பு வழங்குதல்

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிகளை அடிப்படையாகக் கொண்டு மற்றும் நிலைபேறான அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு உற்பத்திகளின் பண்பு சாா் தன்மையினை அதிகரித்தல் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட ஏற்றுமதி வருமானங்களை அதிகரித்துக் கொள்வது இதன் மூலம் எதிா்பாா்க்கப்படுகின்றது.

அதற்கேற்ப 2019 ஆம் ஆண்டில் செயற்பாட்டுப் அபிவிருத்திப் பிரிவின் பிரதான நடவடிக்கைகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. தெங்கு சாா்ந்த கைத்தொழிலைப் பதிவு செய்வதன் மூலம் நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப கைத்தொழிலில் பராமரிப்பை ஒழுங்குபடுத்திச் செல்லல்.

2. தெங்கு உற்பத்தி நிறுவனங்களைப் பரிசோதித்தல், மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் நுண்ணுயிரியல் மற்றும் பௌதீக தரச் சான்றிதழை வெளியிடுவதன் மூலம் தெங்கு சாா்ந்த உற்பத்திகளின் தரத்தினை நிலைநிறுத்துவதற்காக கைத்தொழிலாளா்களை ஈடுபடுத்துதல்.

3. தெங்கு உள்ளீடு சாா்ந்த கைத்தொழில்களின் பொருட்டு ISO 22000 உணவு பாதுகாப்பு தொடா்பான தரச் சான்றிதழ் முறைமை மற்றும் தெங்கு உள்ளீடு சாராத கைத்தொழில்களுக்கான சிறந்த உற்பத்தி தயாரிப்புகள் முறையாக (GMP) தர முறைமைகள் ஆகிய சா்வதேச தரச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் முறைமைகளில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்குவதன்ஊடாக உற்பத்தி செயற்பாடு மற்றும் முடிவுப் பொருட்களின் பண்புசாா் தன்மையினை மேம்படுத்தல்.

4. உலா்த்திய தெங்கு உற்பத்தி நிறுவனத்திற்காக ஆலை அபிவிருத்தி நிதியத்தின் கீழ் நவீனமயப்படுத்தல் மற்றும் உற்பத்தி மேற்கொள்ளாத சந்தா்ப்பங்களில் ஊழியா் வேதனம் செலுத்துவதற்கு நிதிசாா் ஒதுக்கீடு வழங்குதல்.

5. தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களுக்காக மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி என்பவற்றுடன் இணைந்து சலுகை வட்டிக் கடன் யோசனை முறையினை அமுல்படுத்துவதன் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.

6. தரமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் தரமான தேங்காய் எண்ணெயினை வாடிக்கையாளர்களுக்கு சென்றடைவதற்காக உரிய செயன் முறையினை தயாரித்தல் மற்றும் அதற்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தல்.

7. தேங்காய் தும்பு நார் உற்பத்திக்காக அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தும்பு மற்றும் தும்பு சோறு மூலக்கூறுகளை கைத்தழிலை உள்நாட்டு மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப பராமரிப்பை ஒழுங்குபடுத்துதல்.

8. அலுவலர்களின் வினைத்திறன் மற்றும் பயனுள்ளதான சேவைகளை வழங்குவதற்காக திறன்களை அபிவிருத்தி செய்தல்.

9. செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் ஆராய்ச்சி பிரிவிடம் பரிசோதனைக்கான ISO 17020:2012 அங்கீகாரச் சான்றிதலினைப் பெற்றுக் கொள்ளல்.

10. முறையற்ற கைத்தொழில்களின் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்காக தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், உபகரணங்களை வழங்குதல் மற்றும் முதலீட்டு உதவிகளை வழங்குதல்.

1.1 தெங்கு சார்ந்த கைத்தொழிலைப் பதிவு செய்தல்

2018 நவம்பர் மாதத்தில் இருந்து, 2019 ஆம் ஆண்டில் தெங்கு சார்ந்த உற்பபத்தியாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை பதிவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிய பதிவு விண்ணப்பங்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் கொழும்பு 01, ஆதிபாத வீதியின் கோட்டை அலுவலகத்தில் மற்றும் குருணாகல், கம்பஹா, புத்தளம், காலி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை போன்ற பிரதேச அலுவலகங்களின் ஊடாகவும் விநியோகிக்கப்பட்டது. மேலும் உரிய பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளம் ஊடாக பெற்றுக்கொள்வதற்கும், இணையத் தளத்துடன் நேரடியாக (on line) முறை ஊடாக பதிவினை விண்ணப்பம் செய்வதற்கும் கைத்தொழிலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

	உற்பத்தி பொருள் வகை	பதிவு		
		2017	**2018**	**2019**
1	உலர்த்தப்பட்ட தெங்கு	50	46	48
2	தேங்காய்ப்பால் மா	13	15	17
3	தேங்காய் கிறீம்	9	9	12
4	கொப்பறா தேங்காய் எண்ணெய்	59	69	89
5	சுத்தமான தேங்காய் எண்ணெய்	65	58	60
6	தொழிற்சாலைத் தேங்காய் எண்ணெய்	9	6	7
7	தேங்காய் தண்ணீர்	21	22	22
8	தேங்காய் வினாகிரி	1	1	1
9	செப்பனிடப்பட்ட தேங்காய் எண்ணெய்	27	23	34
10	தேங்காய்ப் பால்	16	21	22
11	Milk/மாவாக்கப்பட்ட தேங்காய்ப்பால்	4	4	6
12	தேங்காய்ப் பால் சார்ந்த உற்பத்திகள்	4	4	5
13	செயலூக்கக் காபன்	8	9	7

14	தும்பு/நார்ஆலை	192	342	267
15	முடிவுப்பொருட்கள்	105	133	126
16	தும்புச்சோறு	113	117	120
17	தும்பு இடைநிலைத் தயாரிப்புகள்	22	31	39
18	தேங்காய் வெண்ணெய்	4	3	7
19	தேங்காய் சீனி	2	3	4
20	சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்	6	7	7
21	அழகு சாதனப் பூச்சிகள்	1	1	1
22	கொப்பறா உற்பத்திகள்	16	35	26
23	தேங்காய் பரப்பல்	3	4	3
24	மீள்பொதியிடல்	2	2	1
25	தேங்காய் சிரப்	2	5	3
26	தேங்காய்ச் சிரட்டைக் கரி	5	5	5
27	hub Operator	1	1	1
28	சிரட்டைக் கரி	16	17	33
29	சிரட்டை துண்டுகள்/ சிரட்டை தூள்	-	3	1
30	சிரட்டை துண்டுகள் சார்ந்த அலங்காரப் பொருட்கள்	4	6	8
31	வெள்ளைத் தேங்காய் எண்ணெய்	23	31	38
32	அதி குளிரூட்டப்பட்ட துருவிய தேங்காய்	2	2	1
33	தேங்காய் பாணி	2	2	7
34	தேங்காய் பால் தயாரிப்பு	_	2	2
35	தேங்காய் ஜாம்	_	1	1
36	ஏனைய	4	0	15
	மொத்தம்	**811**	**1040**	**1046**

அட்டவணை 01 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்கள்/ தயாரிப்பாளர்களின் பதிவு

கடந்த 03 வருடங்களினுள் அதிகார சபை மற்றும் பதிவு செய்யப்பட்ட தெங்கு சார்ந்த கைத்தொழில்கள் பற்றிக் கருதும் போது, தேங்காய் எண்ணெய், தும்புச் சோறு, அது தொடர்பான உற்பத்திக் கைத்தொழில்கள் மற்றும் சிரட்டைக் கரி பதிவு செய்வதில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. மதிப்பீட்டு ஆண்டுகளில் விசேடமாக தேங்காய் எண்ணெய், சிரட்டைக் கரி கைத்தொழில் அபிவிருத்திக்காக அதிகார சபையினால் காட்டப்பட்டுள்ள அனுசரணை மற்றும் கருத்திட்டத்தின் சேவைகள் விரிவடைதல் இப் பதிவின் அதிகரிப்பிற்கு காரணமாக உள்ளது.



படம் 1: மாவட்ட தேங்காய் பதிவு செய்யப்பட்ட உற்பத்தி தொழில்கள் திட்டம்

மொத்தப் பதிவினை கருதும் போது சென்ற வருடங்களைப் போன்று, 32.9% ஆன அதி உயர் கைத்தொழிலாளர்களை குருணாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு புத்தளம் மாவட்டத்தில் 20%உம், கம்பஹா மாவட்டத்தில் 18.5 % ஆகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தென்னை முக்கோண வலய கைத்தொழில் செயற் திட்டம் 71.8 % ஆகும். எஞ்சிய அனைத்து மாவட்டங்களிலுமான பதிவு 28.2 %ஆக மட்டுமே ஆகும். அது கடந்த ஆண்டிலும் பார்க்க 10% ஆன அதிகரிப்பாகும். இந் நிலைமையானது தென்னை முக்கோணத்திற்கு வெளியே கைத்தொழிலை விரிவாக்கும் அதிகார சபையின் நோக்கத்தில் ஒரு கட்டமாகும்.

1.2. தெங்கு சார்ந்த உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் சர்வதேச தர விவரக் குறிப்புகளின் படி பராமரித்தலும் ஒழுங்குபடுத்தலும்

1.2.1 தும்பு நார் மற்றும் தும்புச்சோறு மூலக் கூறுகளின் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

தும்பு நார் உற்பத்தியாளர்கள் தமது நிறுவனத்தின் உற்பத்திகளான தும்பு நார் மற்றும் தும்புச் சோறுகளின் தரம் தொடர்பாக அறிவுறுத்துவதற்கும், விவரக் குறிப்புகளால் விலகல்களை அவதானித்து உற்பத்தி செயன்முறையினை வடிவமைப்பதற்கும் தும்பு நார் மற்றும் தும்புச்சோறு மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல் நோக்கமாகும்.

அதன்படி 2019 ஆம் ஆண்டுக்காக அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட தும்புச்சோறு மூலக்கூறுகள் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து 133 உற்பத்திகளின் மாதிரிகளை திரட்டி தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தெரிவு செய்யப்பட்ட 139 தும்பு நார் உற்பத்திகளின் மாதிரிகளை திரட்டி தரச் சான்றிதழ்களை எவழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தந்த நிறுவனங்களில் விவரக் குறிப்புகளிலிருநது விலகல்களை ஆய்வு செய்து செவ்வையாக்குவதற்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டது.

1.2.2 புதிய தேங்காய் எண்ணெய் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

பகுப்பாய்வு அறிக்கை படி, புதிய தேங்காய் எண்ணெய்க்கான உற்பத்திகளின் தரமானது இலங்கை தரநியம நிறுவனத்தின் ஒப்பீடுகளுடன் பொருந்தாத சந்தர்ப்பத்தில் அந்த தரவுகளின் செவ்வைத் தன்மை பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் இப் பகுப்பாய்வு செயற்பாட்டின் பிரதான குறிக்கோளாகும்.

புதிய தேங்காய் எண்ணெய் மாதிரிகள், அதிகார சபையின் ஆய்வுகூடம்மூலம் இலவச கொழுப்பு அமிலங்கள் (Free fatty acids), நிறம் (Colour) , ஈரப்பதம் (Moisture) , அயடின் மதிப்பு (Iodine value) , அரேபிக் தட்டுகளின் எண்ணிக்கை (Aerobic plate count) என்பவற்றின் பகுப்பாய்வு அளவுருக்களின்கீழ் ஆய்வுகள் மேறகொள்ளப்பட்டன.
புதிய தேங்காய் எண்ணெய் மாதிரிகளின் பகுப்பாய்வு செயற்பாட்டில் மூன்றாவது கட்டத்திற்காக இந்த பகுப்பாய்வு அளவுருக்கள் இலங்கை தர நியமங்களின்படி (SLS) மேற்கொள்ளப்பட்டதுடன், தேங்காய் எண்ணெய்க்கான இலங்கை தர நியமங்கள் (SLAS 32:2017) தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அரேபிக் தட்டுகளின் எண்ணிக்கை (Aerobic plate count) ஆகிய பகுப்பாய்வு அளவுருக்களுக்குப் பதிலாக ஈஸ்ட் மற்றும் பூஞ்ஞனம் (Yeast & Moulds) ஆகிய பகுப்பாய்வு அளவுருக்களின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் மூன்றாவது கட்டத்தில் பகுப்பாய்வு நடவடிக்கை மேறகொள்ளப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் 60 புதிய தேங்காய் எண்ணெய் மாதிரிகளை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

1.2.3 தேங்காய் பால் உற்பத்திகளின் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

2019 ஆம் ஆண்டுக்காக 20 தேங்காய் பால் உற்பத்தி கைத்தொழிற்சாலைகளும் 03 மாவாக்கப்பட்ட தேங்காய் பால் உற்பத்தி நிறுவனங்களும் பதிவாகியுள்ளன. அதில் 03 நிறுவனங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கும் ஏனைய நிறுவனங்கள் வெளிநாட்டு சந்தைளுக்கும் தமது பல்வேறு பொதிகளை பயன்படுத்தி தேங்காய் பால் உற்பத்திகளை வழங்குகின்றது. தயாரிக்கப்பட்ட தேங்காய் பாலானது இயற்கையான தேங்காய் பால் போன்று தரத்துடனும் போஷாக்குடனும் உள்ளதா என்பதை பின்னாய்வு செய்வதற்காக சந்தையில் உள்ள தேங்காய் பால் மற்றும் மாவாக்கப்பட்ட தேங்காய் பால் என்பவற்றை பரிசோதனைக்கு-ட்படுத்தப்பட்டது.

இதன்போது 2018 ஆம் ஆண்டில் மேற்படி கைத்தொழிற்சாலைகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட 23 மாதிரி கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனங்களை பரிசோதனைக்குட்படுத்தியதுடன், அது 2019 ஆம் ஆண்டு தொடக்கம் தெங்கு அதிகார சபையின் ஆய்வு கூடத்தால் பரிசோதனைக்குட்படுத்தல் காலாண்டு ரீதியாக மேற்கொள்ளப்பட்டது. அதன்போது 64 தேங்காய் பால் மாதிரிகளையும் 08 மாவாக்கப்பட்ட தேங்காய் பால் மாதிரிகளையும் பரிசோதனை செய்து ஆய்வுக்கான அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டது.

குறித்த பரிசோதனையின்போது தரத்துடன் கூடிய உயர் உற்பத்திகள் சந்தையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்தப்பட்டது. தேங்காய்ப் பால் மற்றும் மாவாக்கப்பட்ட பால் உற்பத்தியில் பெற்றுக்கொள்ளப்பட்ட துணைப்பொருளான Coconut shells வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் தேங்காய் எண்ணெய் கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டு, இலங்கை தரநியமத்திற்கு அமைவாக செப்பனிடப்பட்ட தேங்காய் எண்ணெய் எவ்வாறு செய்யப்படுகின்றது என்பது தொடர்பாக கைத்தொழிலாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

1.2.4 தெங்கு உற்பத்திக்காக நுண் உயிரியல் மற்றும் பௌதீக தரச்சான்றிதழ்களை வழங்குதல்.

- 2019 ஆம் ஆண்டில் உலர்த்திய தேங்காய் 44081.21மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், இதில் நுண் உயிரியல் மற்றும் பௌதீக அளவுருக்களின் தரமான பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக நாளாந்தம் உலர்த்திய மாதிரிகள் 10122 செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவிடம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதனை அடிப்படையாகக்கொண்டு 1043 ஏற்றுமதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டின் தேங்காய் அறுவடை 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பதிவின் அதிகரிப்பு அதற்கு காரணமாகியது. அது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உலர்த்தப்பட்ட தேங்காய் உற்பத்தியில் 79% ஆன அதிகரிப்பால் ஏற்பட்ட போக்கு ஆகும்.

சான்றிதழ்களின் வகைகள்	வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை	
	2018	**2019**
செல்மொனெல்லா அற்றவைகள்	**320**	**384**
பௌதீக தரப்பகுப்பாய்வு	**320**	**384**
அப்ளடோக்சின் அற்றவைகள்	**84**	**127**
சல்பர் டயொக்சைட் அற்றவைகள்	**85**	**148**
மொத்த எண்ணிக்கை	**809**	**1043**

அட்டவணை 02 - உலர்த்தப்பட்ட தேங்காய் ஏற்றுமதி இருப்புகளின் பொருட்டு நுண் உயிரியல் மற்றும் பௌதீக தரப் பகுப்பாய்வு சான்றிதழ்களை வழங்குதல்.

- ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களினால் தேவைக்கேற்ப கொண்டு வந்து கையளிக்கப்படும் தெங்கு சார்ந்த உற்பத்தி மாதிரிகளை பகுப்பாய்வுப் பணிகளுக்காக இரசாயண ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, பெறப்பட்ட பெறுபேறு ஆவணங்களுக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு பகுப்பாய்வு அறிக்கைச் சான்றிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உற்பத்தி வகை	வெளியிடப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை		
	2019	**2018**	**2017**
தும்பு	213	187	184
தேங்காய் எண்ணெய்	211	341	332
உலர்த்திய தேங்காய்	18	13	42
கொழுப்பு ஓரளவு நீக்கப்பட்ட உலர்த்திய தேங்காய்	87	144	121
தேங்காய்ப் பால்	9	3	7
முழுமையான எண்ணிக்கை	411	259	264
தும்புச் சோறு	103	68	-
புதிய தேங்காய் எண்ணெய்	25	17	-
தேங்காய் தண்ணீர்	99	79	-

அட்டவணை 03 - கைத்தொழிலாளர்களின் வேண்டுகோள்படி கிடைக்கப்பெறும் மாதிரிகளுக்கான பெறுபேற்று அறிக்கைகளை வழங்குதல்

1.3. தேங்காய் உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களின் பொருட்டு ISO 22000:2005/2018 உணவு பாதுகாப்பு தொடர்பான தரச் சான்றிதழ் முறைமை மற்றும் தேங்காய் உள்ளீடு சாராத கைத்தொழில்களுக்கான சிறந்த உற்பத்தி முறைகள் (GMP) தர முறைமைகள் கணக்காய்விற்கு ஒத்துழைப்பு வழங்குவதன்ஊடாக உற்பத்தி செயற்பாடு மற்றும் முடிவுத்திய உற்பத்திகளின் பன்புசார் தன்மையினை மேம்படுத்தல்.

ISO 22000:2005/2018 என்பது உணவாக நுகர்விற்காக பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்துகின்ற தரச் சான்றுப்படுத்தல் முறைமையாகும். தேங்காய் உள்ளீடு மற்றும் தேங்காய் தண்ணீர் சார்ந்து தயாரிக்கப்படும் உணவு உற்பத்திகளின் பொருட்டு இந்த தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச தர நியமங்களுடன்கூடிய வினைத்திறனான, நிலைபேண்தகு முறைமை தாபிப்பதன் ஊடாக உயர் தரத்திலான உற்பத்தியினை உருவாக்குதல் இதன் அடிப்படை நோக்கமாகும். இதன்மூலம் பன்புசார் மற்றும் தரநியமத்துடன்கூடிய உற்பத்திகளை சந்தைக்கு வழங்கப்படுவதுடன், அதனூடாக கைத்தொழிலாளர்களுக்கு சந்தையினுள் விசேட இடத்தினை கட்டியெழுப்புவதற்கு முடியுமாகும்.

இதன்போது SLAB மற்றும் IFA ஆகிய நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்திய நிறுவனங்கள் கணக்காய்வு நடவடிக்கைகளை பேணுகையில் கணக்காய்வு பொருட்டு பயிற்சிப்பெற்ற கள அலுவலரை அதற்காக ஈடுபடுத்தப்படுவதுடன், அந்த அலுவலரால் வழங்கப்படும் அவதானிப்பு அறிக்கைபடி சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் உள்ள குறைபாடுகளை செவ்வையாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு இறுதியில் 80 கைத்தொழில்கள் ISO 22000:2005/2018 கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

GMP என்பது சிறந்த உற்பத்தி செயற்பாட்டினை பராமரிக்கப்படுவதாக உறுதிப்படுத்துகின்ற தர முறைமையாகும். இந்த தரச் சான்றிதழ் தும்பு சார்ந்த உற்பத்திகள் மற்றும் தும்புச்சோறு உற்பத்திகளை பதிவு செய்கையில் கட்டாயப்படுத்தப்பட்டது. இந்த தரச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் முறைமையில் கணக்காய்வு நடவடிக்கைகளின் பொருட்டு பங்களிப்பு வழங்குவதன்ஊடாக உற்பத்தி செயற்பாடு மற்றும் முடிவுறுத்தப்பட்ட உற்பத்திகளில் தரத்தினை உயர் மட்டத்தில் பேணிச் செல்வதற்காக வடிவமைப்பு அபிவிருத்தி பிரிவு ஒத்துழைப்பு வழங்குகின்றது. 2019 ஆம் ஆண்டு இறுதியல் 64 கைத்தொழில்களில் GMP கணக்காய்வு பரிசோதனைகளில் பங்களிப்புச் செய்தன

1.4. உலர்த்திய தேங்காய் உற்பத்தி நிறுவனங்களுக்காக ஆலை அபிவிருத்தி நிதியத்தின்கீழ் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளின் பொருட்டு நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்

- ஒவ்வொரு உலர்த்தப்பட்ட தெங்கு உற்பத்தி 01 கி.கிராமிற்காக 20 சதத்திலான பணத் தொகையினை குறித்த உலர்த்தப்பட்ட தேங்காய் உற்பத்தி நிறுவனத்தின் பெயரில் தாபிக்கப்பட்டுள்ள, உலர்த்தப்பட்ட தேங்காய் நிதியத்திடம் வரவு வைக்கப்படுகின்றது.சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளின் பொருட்டு குறித்த நிதியத்திலிருந்து தேவையான சந்தர்ப்பங்களில் பணம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் வருடாந்த உலர்த்திய தேங்காய் உற்பத்தி 44,081.21 மெற்றிக் டொன் ஆவதுடன், மாதாந்த உற்பத்திகள் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாதம்	உலர்த்திய தெங்கு உற்பத்தி (மெ.தொ.)
ஜனவரி	3595.42
பெப்ரவரி	3409.26
மார்ச்	3985.32
ஏப்ரல்	2922.57
மே	4508.93

யூன்	3592.89
யூலை	4289.88
ஆகஸ்ட்	4564.38
செப்ரெம்பர்	4363.73
ஒக்டோபர்	4199.33
நவம்பர்	2649.65
டிசம்பர்	1999.85
மொத்தத் தொகை	44081.21

அட்டவணை 4 - 2019 ஆம் ஆண்டில் மாதாந்த உலர்த்தப்பட்ட தெங்கு உற்பத்தி



2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் உலர்த்திய தேங்காய் உற்பத்திகள் அளவு (மெ.டொன்)

2019 (நீலம்) மற்றும் 2018 (சிகப்பு) ஆம் ஆண்டுகளில் உலர்த்தப்பட்ட தேங்காய் உற்பத்திப் பெறுமதிகளின் ஒப்பீட்டு அளவுகளின் வரைபடம் 2 இல் காட்டப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட தேங்காய் பற்றாக்குறையானது தேங்கு கைத்தொழிலுக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியதால் ஆரம்ப காலாண்டுடன் ஒப்பிடுகையில் உற்பத்தியானது பாரிய பின்னடைவை சந்தித்தது .

மாதம்	ஆலை அபிவிருத்தி நிதியத்திற்கான பங்களிப்பு ரூ.
ஜனவரி	650,332.27
பெப்ரவரி	636,745.44
மார்ச்	754,739.78
ஏப்ரல்	556,545.29

மே	856,608.50
யூன்	674,538.78
யூலை	817,854.48
ஆகஸ்ட்	874,517.19
செப்ரெம்பர்	830,107.39
ஒக்டோபர்	805,131.03
நவம்பர்	497,568.20
டிசம்பர்	360,390.13
மொத்தத் தொகை ரூ.	**8,315,078.48**

அட்டவணை 05-2019 ஆம் ஆண்டுக்கான ஆலை அபிவிருத்தி நிதியத்திற்கான பங்களிப்பு

அதன்படி உலர்த்தப்பட்ட தேங்காய் உற்பத்தியில் ஈடுபட்ட பதிவு செய்த நிறுவனங்களுக்கு உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதன் பொருட்டு ரூபா. 8,315,078.48 தொகை ஆலை அபிவருத்தி நிதியத்தில் வரவு வைக்கப்பட்டது.

1.5. தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களுக்காக மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து அமுல்படுத்தப்படும் சலுகைக் கடன் வட்டி உத்தேசத் திட்டம்

மக்கள் வங்கியுடன் ஒன்றிணைந்து, கப்றுக்க உற்பத்தி ஊக்குவிப்புக் கடன் உத்தேசத் திட்டம் 2012.05.16 ஆம் திகதி அவ் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமும், பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒன்றிணைந்து, கப்றுக்க ஜய இசுரு கடன் உத்தேசத் திட்டம் 2015.02.25 ஆம் திகதி அவ் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமும் ஆரம்பிக்கப்பட்டன. அதனூடாக பதிவிற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைக் கவரக் கூடிய வகையிலும், அதன்மூலம் அக் கைத்தொழில் அபிவிருத்தியினை இலகுவாக அடைவதனையும் நோக்கமாகக் கொண்டு மேற்படி குறைந்த வட்டிக் கடன் உத்தேசத் திட்டங்கள் இரண்டினை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் வங்கியின் கப்றுக்க உற்பத்தி ஊக்குவிப்புக் கடன் உத்தேசத் திட்டத்தின் மூலம் வங்கியின் வணிக வட்டியின் கீழ் அக் கடன் தொகையினை 60 தவணைகளில் செலுத்துவதற்கு கைத்தொழிலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டு உள்ளதோடு, அத் தொகைக்காக வருட இறுதியில் 6% வட்டி வீதம் ஒன்று கைத்தொழிலாளருக்கு உரித்துடையதாகுமாறு தயாரிக்கப்பட்டுள்ளது. அதிகமாக கைத்தொழிலாளர்களிடம் இருந்து அறவிடப்பட்ட வட்டி அதிகார சபையினால் கைத்தொழிலாள்களுக்கு மீளளிப்புச் செய்வதனை வங்கியினால் செலுத்தப்படுகிறது. பிரதேச அபிவிருத்தி வங்கியின் கப்றுக்க ஜய இசுரு கடன் உத்தேசத் திட்டத்தின் மூலம் நேரடியாக கைத்தொழிலாளர்களுக்கு 6% வருடாந்த வட்டி ஒன்றின் கீழ் கடன் தொகை வழங்கப்படும். இந்த இரண்டு கடன் திட்டங்களும் மீள்நிதிசார் கடன் திட்டங்களாகும்.

மக்கள் வங்கியின் கப்றுக்க உற்பத்தி ஊக்குவிப்புக் கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் வங்கி மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு மீளளிப்புச் செய்யப்படுகின்ற வட்டித் தொகை அதிகார சபைக்கு இது நிகழ் நேரச் செலவாகும். எனினும், பிரதேச அபிவிருத்தி வங்கியின் கப்றுக்க ஜய இசுறு கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் கடனைப் பெறுகின்ற கைத்தொழிலாளர்களால் நேரடியாக 6% வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் கடன் தவணை வங்கிக்கு செலுத்தப்படுவதாகவும் அக் கடன் திட்டத்தின் கீழ் வட்டி அதிகார சபைக்கு நிகழ் நேரச் செலவொன்று இல்லாத போதிலும் இந்த இரண்டு கடன் உத்தேச திட்டத்தின் கீழ் கைத்தொழிலாளர் வங்கியிடம் செலுத்தப்படுகின்ற 6% ஆன வட்டியில் பாதியினை அதாவது 3% வட்டி தொகையினை அதிகார சபைக்கு வங்கி செலுத்துகின்றது.

இந்த உத்தேசத் திட்டம் இரண்டின் கீழ் கடன் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்கள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு அமையப் பெறுகின்றது.

வருடம்	மக்கள் வங்கி		பிரதேச அபிவிருத்தி வங்கி		மொத்தம்	
	எண்ணிக்கை	வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபா. மில்லியன்)	எண்ணிக்கை	வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபா. மில்லியன்)	எண்ணிக்கை	வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபா. மில்லியன்)
2012	17	11.99.	_	_	17	11.99
2013	67	47.35	_	_	67	47.35
2014	40	19.67	_	_	40	19.67
2015	31	17.54	06	7.42	37	24.96
2016	06	1.72	06	5.67	12	7.39
2017	02	1.50	05	8.40	07	9.90
2018	08	7.66	53	65.30	61	72.96
2019	07	5.65	59	70.86	66	76.51
மொத்தம்	**178**	**113.08**	**129**	**160.79**	**307**	**268.72**

அட்டவணை 06 - கடன் திட்டங்களின் மொத்த முன்னேற்றம்

வகை	உள்ளீடு சார்ந்த கைத்தொழில்		வகை	உள்ளீடு சாராத கைத்தொழில்	
தேங்காய் எண்ணெய்	74	58.05	தும்பு	112	106.84
புதிய தேங்காய் எண்ணெய்	2	4.00	தும்பு நார் சார்ந்த	67	48.74
வெள்ளை தேங்காய் எண்ணெய்	5	7.00	கரி	16	14.2
கொப்பறா தேங்காய் எண்ணெய்	14	13.05	சிரட்டை சார்ந்த	9	4.51
உலர்த்திய	1	2.00	மூலக்கூறுகள் சார்ந்த	7	10.33
மொத்தம்	**96**	**84.10**	மொத்தம்	**211**	**184.62**

அட்டவணை 07 - கைத்தொழில் வகைப்படி

ஆண்டு	விண்ணப்பத்தாரிகளின் எண்ணிக்கை	கடன்தொகை ரூபா.மில்லியன்	பணம் சீராக்கல்		செலுத்துவதற்கு மீதியாகவுள்ள கடன்தொகை ரூபா.மில்லியன்	
2012	17	11.99.	16	9.99	1	2.00
2013	67	47.35	67	47.35	-	-
2014	40	19.67	38	18.74	2	0.93
2015	31	17.54	14	5.19	17	12.35
2016	06	1.72	03	2.75	03	2.75
2017	02	1.50	01	0.50	01	1.0
2018	08	7.66	-	-	08	7.66
2019	07	5.65	-	-	07	5.05
மொத்தம்	**178**	**113.08**	139	81.34	**39**	**31.74**

அட்டவணை - 8 மக்கள் வங்கியின் கப்ருக்க உற்பத்தி திரிய கடன் தொகை சீராக்கல் தொடர்பான விபரங்கள்

விபரம்	2018			2019		
	கடன்பெறுநர்களின் எண்ணிக்கை	கடன் தொகை (ரூபா.மில்)	அறவிடப்பட வேண்டிய கடன் தொகை (ரூபா.மில்)	கடன் பெறுநர்களின் எண்ணிக்கை	கடன் தொகை (ரூபா.மில்)	அறவிடப்பட வேண்டிய கடன் தொகை (ரூபா.மில்)
12.31 දිනට	70	59.43	27.04	46	35.25	17.32

அட்டவணை 9 - மக்கள் வங்கியின் - கப்ருக்க உற்பத்தி திரிய கடன் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படும் கடன் பெறுநர்களின் விபரம்

வருடம்	வங்கியின் பரிந்துரை						அதிகார சபையினால் பரிந்துரை செய்யப்பட்ட			
	வட்டிச் சலுகைகளின் எண்ணிக்கை		கடன் தொகை ரூ. மில்.		வட்டிச் சலுகைத் தொகை ரூ. மில்		செலுத்தப்பட்ட வட்டிச் சலுகைகளின் எண்ணிக்கை		செலுத்தப்பட்ட வட்டிச் சலுகைத் தொகை ரூ. மில்	
	2018	2019	2018	2019	2018	2019	2018	2019	2018	2019
1 ஆம் காலாண்டு	118	61	93.13	51.7	0.53	0.46	66	37	0.38	0.42
2 ஆம் காலாண்டு	94	46	73.56	38.17	0.43	0.28	52	20	0.28	0.26
3 ஆம் காலாண்டு	76	40	61.96	31.54	0.34	0.24	43	22	0.23	0.23
1 ஆம் காலாண்டு	69	44	54.99	35.25	0.26	0.36	38	23	0.19	0.25
மொத்தம்	**357**	**191**	**283.64**	**156.66**	**1.56**	**1.34**	**199**	**102**	**1.08**	**1.16**

அட்டவணை - 10 2018 - 2019 ஆண்டுகளுக்கான வட்டி ஒதுக்கீடு செலுத்தல்

வருடம்	2018	2019
வங்கியினால் பரிந்துரை செய்யப்பட்ட வட்டித் தொகை	**1.56**	**1.34**
அதிகார சபை மூலமான கொடுப்பனவுகள்	**1.08**	**1.16**
வங்கியினால் பரிந்துரை செய்யப்பட்ட கொடுப்பனவின் சதவீதம்	**69.2%**	**86.6%**

அட்டவணை 11 - 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மக்கள் வங்கியிடம், அதிகார சபையால் கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டி ஒதுக்கீடுகளின் சாராம்சம்

2019.12.31 ஆம் திகதிக்கு அதிகார சபைக்கு கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	**96**
2019 ஆம் ஆண்டில் கடன் வழங்கிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை	**59**
அதற்கேற்றவாறான கடன் தொகை	**70,855,000.00**

அட்டவணை 12 - 2019 ஆம் ஆண்டில் கப்ருக்க ஜய இசுரு கடன் உத்தேச திட்டத்தின் சதவீதம்

இந்த இரண்டு உத்தேச கடன் திட்டம் தொடர்பாகவும் அதிகார சபை மூலம் கைத்தொழில் துறைக்கு நிறைவேற்றப்படும் சேவைகள் தொடர்பாகவும் , தேங்காய் சிரட்டை திட்டம் மற்றும் தேங்காய் மட்டை திட்டம் என்பன மனைகள் மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு கைத்தொழில் துறையினை அணுகுதல் தொடர்பாகவும் மாத்தளை, கண்டி, அநுராதபுரம்,பொலன்னறுவை மற்றும் வடக்கு மாகாணத்தில் 05 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

அதேபோன்று கடன் உத்தேச திட்டங்களில் முன்னேற்றம் தொடர்பாகவும் அமுலாக்கும்போது வங்கி சார்ந்து எழுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு கடன் திட்டம் மூலம் கைத்தொழிலாளர்கள் இது வரை அடைந்துக்கொண்டுள்ள முன்னேற்றம் தொடர்பாகவும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் 04 ஐ மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டது.

உருவப்படம் 3 - கடன் பெற்றுக்கொண்ட வெள்ளை தேங்காய் எண்ணெய் கைத்தொழிற்சாலை பெற்றுள்ள முன்னேற்றம்

உருவப்படம் 4 - கடன் பெற்றுக்கொண்ட கொப்பறா தேங்காய் எண்ணெய் கைத்தொழிற்சாலை பெற்றுள்ள முன்னேற்றம்

உருவப்படம் 5 - கடன் பெற்றுக்கொண்ட தும்பு கைத்தொழிற்சாலை பெற்றுள்ள முன்னேற்றம்

உருவப்படம் 6 - கடன் பெற்றுக்கொண்ட நார் கைத்தொழிற்சாலை பெற்றுள்ள முன்னேற்றம்

இதற்கு மேலதிகமாக கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அடிப்படை தகைமையாக அதிகார சபையில் பதிவும் ஒரு காரணமாக அமைவதால் கடன் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் புதிய பதிவாளர்ளின் பதிவில் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. அதாவது கடன் திட்டம் மற்றும் ஏனைய நிவாரண திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக கைத்தொழிலாளர்களை அதிகார சபையில் பதிவு செய்வதற்காக நேரடியற்ற முறையில் ஈடுபடுத்தலும் நடைபெறுகின்றது.

உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களுக்கிடையில் தேங்காய் எண்ணெய் சார்ந்த கைத்தொழில் மட்டும்	88
தும்புநார் மற்றும் மூலக்கூறுகள் கைத்தொழில்	69
தும்பு நார் சார்ந்த முடிவுப்பொருட்கள், கரி சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் சிரட்டை சார்ந்த கைத்தொழில்கள்	68

அட்டவணை 12 - 2019 ஆம் ஆண்டில் பதிவு செய்வதற்கு முன்வைக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள்

அதேபோன்று புதிதாக கைத்தொழில்களில் ஈடுபடுகின்ற 36 கைத்தொழிலாளர்களுக்கிடையில் 14 பேர் இந்த கடன் திட்டத்தின்கீழ் தற்போது கடனுக்காக விண்ணப்பம் செய்துள்ளனர்.

1.6 தரமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் தரமான தேங்காய் எண்ணெயினை நுகர்வோருக்கு வழங்குவதற்கான செயன்முறை ஒன்றினைத் தயாரித்தல் .

தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் பொருட்டு உற்பத்தியாளர்களை ஈடுபடுத்தல் மற்றும் அதன்மூலம் தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை மேம்படுத்துவதனை நோக்கமாகக்கொண்டு 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக் கருத்திட்டம் தொடர்ச்சியாக 2019 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்போது உள்நாட்டு சந்தைக்கு வழங்கப்படுகின்ற தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெயை, நுகர்வோர் இலகுவாக அடையாளம் காணக் கூடிய வகையில் இலச்சினையினை உருவாக்கப்பட்டு, குறித்த இலச்சினையை வெளியிடுவதற்கு தகைமை பெறுகின்ற கைத்தொழிலாளர்களை தெரிவு செய்வதற்கு சட்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. அதற்காக சாண்றான்மையுடைய குழுவாக சுகாதார அமைச்சு, நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபை, இலங்கை தர நிர்ணய நிறுவனம் மற்றும் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களின் சங்கம் என்பன பங்குபெறச்செய்விக்கப்பட்டன.

அதன்படி இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள தேங்காய் உற்பத்தி நிறுவனங்கள் தரத்தின்படி ஒவ்வொன்றும் உள்ளபடியால் இலட்சினையை வழங்கும் எல்லை யினை நிருணயிப்பதற்கு புள்ளிகள் முறையினை தாபிக்கப்பட்டது. இந்த இலட்சினை தரத்தினை குறிக்கப்படும் இலட்சினையாவதால் அதில் உள்ள 5 நட்சத்திர அடையாளங்கள் மூலம் குறித்த தரம் உறுதிப்படுத்தப்படுகின்றது. அதேபோன்று இலட்சினையை வெளியிடுவதற்காக 5 நட்சத்திரங்களின் அடையாளத்திற்கு ஏற் புடையதான தரத்தினை குறிக்கின்ற 5 ம் குறித்த நிறுவனத்திற் கே உரித்தாகுதல் வேண்டும்.

2019.04.11 ஆந் திகதி குறித்த இலட்சனை அதற்கான சட்ட திட்டங்களுடன் தேசிய புலமைச் சொத்து பணியகத்தில் பதிவு செய்வதற்காக கையளிக்கப்பட்டதுடன், இலட்சினையை பதிவுசெய்யும் ஆரம்ப சுற்று முடிவுறுத்தப்பட்டு பதிவு இலக்கத்துடன், அந்த இலட்சினை தேசிய புலமைச் சொத்து பணியகம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக 2020.01.24 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு இலட்சினையை வெளியிடுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயங்கள் எவையெனில், 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தேங்காய் எண்ணெய் மாதிரி பரிசோ தனை , தேங்காய் எண்ணெய் பாரிய அளிவில் ஏனைய எண்ணெய் வகைகளுடன் கலக்கப்பட்டிருத்தல், பழசாய் போயிருத்தல், தரமல்லாத மூலப் பொருட்களை பயன்படுத்தியிருத்தல், பிழையான 20 நடை முறைகளை பயன்படுத்தி சுகாதாரத்திற்கு பாதகமான வகையில் உற்பத்தி செய்றபாட்டில் ஈடுபடுதல் என்பனவாகும்.

ஆகையால் இந்த அடிப்படை விடயங்களின் பொருட்டு முதன்மை வழங்கப்பட்டு இலங்கை தரநிர்ணயத்தின் SLS 32: 2017 இற்கு ஒழுங்கமைவாக தேங்காய் எண்ணெயில் அயடின் பெறுமதியும், இலவச கொழுப்பு அமில அளவும், எப்லடோக்ஸின் பெறுமதியும், மாதிரி பிசோதனைக்கு உட்படுத்தி பெற்றுக்கெள்ளப்பட்ட பெறுபேறுகளும் நிறுவனத்தில் உற்பத்தி செயற்பாடு சுகாதார பாதுகாப்புடன் இடம்பெறுவதாகவும், எதுவித இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செயற்பாட்டில் பயன்படுத்தவில்லையெனவும் உறுதிப்படுத்தும் வகையிலும் அந்த இலட்சினையில் 05 நட்சத்திர புள்ளிகளின் அடையாளப்படுத்தும் வகையில் இலட்சினையை நிருமாணிக்கப்பட்டது. குறித்த இலட்சினை பின்வருமாறாகும்.

உருவப்படம் 7 தரப்படுத்திய தேங்காய் எண்ணெய் பொருட்டு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இலட்சினை

மேற்படி மாதிரி பரிசோதனையில் தெரிவு செய்யப்பட்ட 25 நிறுவனங்களை பரிசோதனைக்கு உட்படுத்தி, உரிய புள்ளிகளின் மட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கியதன் பின்னர், அந்த நிறுவனங்களை சான்றாண்மையுடைய குழுக்களின்மூலம் பரிசோதனைக்கு உட்படுத்துவதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டினை 2020 ஆண்டின் பின்னரும் தொடர்ச்சியாக மேறகொள்ளப்படும்.

அதேபோன்று சுகாதார அமைச்சின் 1980 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க உணவு சட்டத்தின்படி சமையல் எண்ணெய் வகைகள், அவ்வாறான சமையல் எண்ணெய் வகைகளுடன் கலப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆகையால் தற்போது அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் சந்தைக்கு வழங்கப்பட்ட தேங்காய் எண்ணெய் வேறு எந்தவித எண்ணெய் வகையுடனும் கலப்பதற்கு அனுமதி கிடைக்காத வகையில் உணவுச் சட்டம் திருத்தம் செய்யப்படுவதற்கு சுகாதார அமைச்சு தற்போது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இந்த இலட்சினை பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை தகைமை அதிகார சபையில் பதிவாகியிருத்தல் என்பதால், இந்த செயலமர்வுகளை அடிப்படையாகக் கொண்டு புதிய 54 தேங்காய் எண்ணெய் கைத்தொழில்கள் அதிகார சபையில் பதிவிடலும் விசேடமான விடயமாகும்.

அதேபோன்று இந்த இலட்சினை வழங்குதல் தொடர்பாக பின்வரும் செயற்பாடுகள் 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது.

விடயம்	2018	2019	மொத்தம்
மாதிரி பரிசோதனை	104	94	198
நிறுவனங்களின் எண்ணிக்கை	74	51	125
அதன் பெறபேறுகள் தரநியமத்திற்கு அமைவாக மாதிரிகளின் எண்ணிக்கை	47	46	93

அட்டவணை 13: தேங்காய் எண்ணெய் தொடர்பிலான இலட்சினை வெளியிடல் பற்றிய செயற்பாடுகள் (2018-2019)

விழிப்புணர்வு செயலமர்வுகள்

1. தரத்துடன்கூடிய தேங்காய் எண்ணெய் நுகர்வுமூலம் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சின் நிபுணத்துவ மருத்துவர்களை தொடர்புபடுத்திக்கொண்டு பொது சுகாதார அலுவலர்கள் மற்றும் அரச அலுவலர்களை அறிவுறுத்தும் 08 செயலமர்வுகள் 07 மாவட்டங்களில் நடாத்தப்பட்டன.

2. மாதிரி பரிசோதனையில் ஆய்வுகூட ஆய்வு அறிக்கைகளில் குறைப்பாடுளை அறிவித்துள்ள கைத்தொழில் நிறுவனங்களிடம் குறித்த குறைப்பாடுகளை தவிர்த்துக் கொண்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்கின்ற முறை தொடர்பாக 03 நாட்களிலான பயிற்சி செயலமர்வு நடாத்தப்பட்டது.

3. இந்த இலட்சினை தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் 03 ஆந் திகதி தெங்கு தினம் அடிப்படையாகக் கொண்டு "தியத உயனவில்" அறிவுறுத்தும் செயலமர்வு நடாத்தப்பட்டது.

4. மக்களை அறிவுறுத்துவதற்காக இலங்கை வானொலி கூட்டுத்தாபனம், ஹிரு ரூபவாகினி அலை வரிசை, சிருத்தா ரூபவாகினி அலை வரிசையிலும் 08 செயலமர்வுகளை இலவசமாக நடாத்துவதற்கு வாய்ப்பு கிடைக்கப் பெற்றது.

5. மொத்தமாக தேங்காய் எண்ணெய் விற்பனை செய்கையில் , குறித்த தேங்காய் எண்ணையும் மேற்படி தரநியமத்திற்கு அமைவாக இருப்பின் குறித்த தேங்காய் எண்ணெய் கொள்வனவு செய்பவர்களை பாதுகாத்துக் கொள்வதற்கு முறைமை தயாரிக்கப்படுகிறது.

உருவப்படம் 8: பயிற்சி செயலமர்வு மற்றும் நிபுணத்துவ குழுமூலம் நிறுவனமொன்றை பரிசோதனைக்குட்படுத்திய சந்தர்ப்பம்.

பொதுவாக, இந்த இலட்சினை வெளியிடுவதன்மூலம் பின்வரும் நோக்கங்களை படிப் படியாக அடைந்துக் கொள்வதற்கு தெங்கு அதிகார சபை எதிர்பார்க்கின்றது.

- தரப்படுத்திய தேங்காய் எண்ணெய் பொருட்டு உள்நாட்டு சந்தையில் கேள்வி களை அதிகரித்தல்
- அதன்படி தரப்படுத்திய தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகரித்தல்
- அதன் பலனாக உற்பத்தி ஆகுசெலவு குறைக்கப்படுதல்
- ஏனைய சமையல் எண்ணெய் வகைகள் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு செலவிடுகின்ற வெளிநாட்டு பணத் தொகை குறைவடைதல் காரணமாக நேரடியற்ற வகையில் வாழ்க்கைச் செலவு குறைவடைதல்
- அதன் மூலம் மொத்த தெங்காய் எண்ணெய் கைத் தொழிலை மேம்படுத்தல்

1.7. தேங்காய்த் தும்பு நார் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.

1.7.1.தும்பு நார் கைத்தொழில்களின் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கான முதலீட்டு உதவியை வழங்குதல்

தும்பு நார் சார்ந்த கைத்தொழிலாளர்கள் சிறந்த உற்பத்தி நடைமுறைகள் தொடர்பான சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு (GMP) முடியாமைக்கான பிரதான காரணியாக உலர்த்தும் மைதானம் இல்லாமை கணக்காய்வின்போது இனங்காணப்பட்டது.

தும்பு சார்ந்த கைத்தொழிலாளர்கள் சிறந்த உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு (GMP) முடியாமை க்கான பிரதான காரணியாக உலர்த்தும் மைதானம் இல்லாமை கணக்காய்வின்போது இனங்காணப்பட்டது. அதன்படி உலர்த்தும் மைதானம் இல்லாத தும்பு நார் சார்ந்த கைத்தொழிலாளர்களிடம் முதலீட்டு உதவி வழங்கும் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்த ஒதுக்கீடுகளில் 2018 ஆம் ஆண்டில் தெரிவு செய்த 25 கைத்தொழில் நிறுவனங்களுக்கும் 2019 ஆம் ஆண்டில் தெரிவு செய்த 20 கைத்தொழில் நிறுவனங்களுக்கும் முதலீட்டு உதவி வழங்கப்பட்டது. அதன்படி 2019 ஆம் ஆண்டில் தும்பு நார் சார்ந்த 20 கைத் தொழிலாளர்களிடம் உலர்த்தும் மைதானம் பொருட்டு முதலீட்டு உதவி வழங்கப்பட்டது. அதன் முன்னேற்றம் திசெம்பர் இறுதியில் 100% ஆகும்.

உருவப் படம் 09 முதலீட்டு சலுகை வழங்கிய உலர்த்தும் மைதானம்

1.7.2 தும்பு நார் உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) பற்றிய சான்றிதழ்

- தேங்காய்த் தும்பு நார் உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் அதன் மூலம் நிரந்தரமான சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள், தேங்காய் தும்பு நார் உற்பத்தித் தொழிலாளர்களை அடையும் நோக்குடன் சாதகமான உற்பத்திப் பயன்பாட்டு சான்றிதழளித்தல்(GMP) தெங்கு நார் கைத்தொழிலிடம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் 66 கைத்தொழில் நிறுவனங்களை கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது.

கணக்காய்வின் குறைபாடுகளை பூர்த்தி செய்து முதன் முதலாக சான்றிதழினைப் பெற்றுக் கொள்கின்ற 08 தொழில் நிறுவனங்களுக்கு GMP சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக உயர்பட்சமாக ரூ. 30,000/- இற்கு உட்பட்ட தொகையினை ஈடுசெய்யப்பட்டதோடு சான்றிதழித்தலுக்காக போக்குவரத்து வசதிகள் அதிகார சபையினால் வழங்கப்பட்டது.

1.8. சம்பிரதாய கைத்தொழில்களின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்காக தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பணியாற்தொகுதியினரை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக திறன் அபிவிருத்தி செய்தல்

8.1 பணியாற்தொகுதியினரை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக திறன் அபிவிருத்தி மேற்கொள்ளுதல்

செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளை மிக வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் நிறைவேற்றிக்கொள்ளும் தேவையின் மீதும் பிரிவில் பணியாற்தொகுதியால் மிக சிறந்த மட்டத்தில் கடமைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்திலும்அ 2019 ஆம் ஆண்டில் செயற்றிட்டம்படி பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு அதன்படி அந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அனே போது அடிப்படையாக கணக்காய்வு பயிற்சி மற்றும் கடமையின் தேவைபடி ISO, HACCP மற்றும் GMP சான்றுப்படுத்தல் தொடர்பான செயலமர்வு மற்றும் ஏனைய தர முகாமைத்துவ கற்கைநெறிகளின் பொருட்டு செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் பணியாற்தொகுதியிரை பங்குபற்றச் செய்விக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறாகும்.

- **ISO தொடர்பான கற்கைநெறிகள்**
  - Training Programme on the role of Junior managers or supervisors in the implementation of ISO 22000:2018 standard.
  - HACCP / ISO 22000:2018 food safety management systems.
  - Auditor/Lead Auditor Course on ISO 22000:2018 Food Safety Management System
  - Workshop on ISO 45001:2018 Standard and Implementation of Occupational Health and Safety Management Systems
  - Internal Auditing as per ISO/IEC 17020:2012

❖ **தர முகாமைத்துவம் தொடர்பான கற்கைநெறிகள்**

- Certificate course in Quality management system.
- Calibration of monitoring and measuring deveices.
- Training Programme on Food Hygiene
- Workshop on taking of corrective actions and follow up actions in closing a non conformity
- Workshop on basic concepts of quality and productivity.
- Laboratory training on microbiology analysis of food and water

❖ GMP **தொடர்பான கற்கைநெறிகள்**

- Training Programme On GMP for coir Industry
- Training programme on Statistical Process Control (SPC), Sampling Techniques and Inspection for Management Systems

❖ **அலுவலக நடவடிக்கைகள் தொடர்பான கற்கைநெறிகள்**

அதன்படி 6.9 மில்லயின் ரூபா தொகை செலவிடப்பட்டு 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளவாறு பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களின் பொருட்டு அபிவிருத்தி செயற்பாட்டு பிரிவில் எல்லா பணியாற்தொகுதியினரும் பங்குபற்றச் செய்விக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக களத்தில் பணியாற்றும் ஊழியர்களின் அறிவை இற்றைப்படுத்தும் நோக்கில் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் ஒவ்வொரு மாத த்திலும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்டப்டது.

1.9. செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் பரிசோதனைகளுக்காக ISO 22000:2012 தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல்

செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவுமூலம் மேற்கொள்கின்ற பரிசோதனைகள் மற்றும் மாதிரிகளை பெற்றுக்கொள்கின்ற அலுவல்களின்போது ஏற்படும் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமைகளை தவிர்த்துக்கொள்வதற்காகவும் அந்தச் சேவைகளின் பொருட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு அங்கீகரிப்பை ஏற்படுத்தும் நோக்கில் , பரிசோதனைக்காக சர்வதேச தரச் சான்றிதழ் முறைமையான ISO 22000:2012 தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல் இலக்காக கொள்ளப்பட்டதுடன் அதற்காக இசைவிணக்க மதிப்பீடு தொடர்பாக இலங்கை அங்கீகரித்தல் சபையின் (SLAB) அனுமதி பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் 2019 ஆம் ஆண்டு இறுதியில் பின்வரும் கணக்காய்வுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், ISO 17020:2012 அங்கீகரிப்பு சான்றிதழ் வழங்குதல் தொடர்பான இறுதி தீர்மானத்திற்கு இசைவிணக்க மதிப்பீடு தொடர்பாக இலங்கை அங்கீகரிப்புச் சபையின் (SLAB) செயற்குழுவிடம் (Commitee) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டப் பிரிவு

1.10. முறையற்ற கைத்தொழில்களின் பொருட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்காக தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், உபகரணங்களை வழங்குதல் மற்றும் முதலீட்டு உதவிகளை வழங்குதல் (கருத்திட்டப் பிரிவு) 2005 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க கப்ருக்க நிதியச் சட்டத்தின்படி தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த சிறு கைத்தொழில்களை மேம்படுத்தியும் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தியும் அந்தப் பிரிவில் தேங்காய் கைத்தொழிலுக்கு வழங்கும் பங்களிப்பை அதிகரிப்பதற்காக இந்தப் பிரிவு தாபிக்கப்பட்டது.

மனை மற்றும் சிறிய அளவிலான கைத்தொழிலாளர்களை அடையாளம் காணுதல், ஒன்றுசேர்த்தல் கப்ருக்க சங்கங்கள் ஒழுங்கமைப்பதன் ஊடாக அந்தப் பிரிவினை வலுவூட்டல், தெங்கு சார்ந்து விரயமாகும் மூலப்பொருட்களை திரட்டி கைத்தொழிலாளர்களிடம் அனுப்பிவைத்தல், தரத்துடன் கூடிய கைத்தொழில்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான தொழிலிநுட்பம், உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல், சந்தை தொடர்புகளை கட்டயெழுப்புதல், புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல், உள்நாட்டு சந்தை கண்காட்சிகளை நடாத்தல், மற்றும் அதற்கு கைத்தொழிலாளர்களை தொடர்புபடுத்திக்கொள்ளுதல், தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கப்ருக்க நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு அதிகார சபையின் பங்களிப்பு வழங்குதல் கருத்திட்டப் பிரிவு ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. தெங்கு சார்ந்து மேற்கொள்கின்ற உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் ரூபா.மில்லியன் 10,000 ம் அளவு சிறு மற்றும் மனை மட்டத்தில் முறையின்றி செய்கின்ற உற்பத்திகளின் ஊடாக உழைக்கப்பட்டுள்ளது. அதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வரும் பிரதான தலைப்புகளின்கீழ் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1.10.1 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்

இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கோரிக்கைகள் தொண்டர் அமைப்புகள், அரச நிறுவனங்கள், கப்ருக்க கைத்தொழில் அமைப்புகள், கிராமிய மட்டத்தில் ஏனைய சங்கங்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களிடமிருந்து கிடைக்கப்-பெறுவதுடன், அது தொடர்பான கற்கைகளை மேற்கொண்டு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தப்படும். புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள புனர்வாழ்வு செய்யப்படுபவர்களின் பொருட்டு முறையான பயிற்சி வழங்கப்-பட்டு அவர்களை சமூகமயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தரத்துடன்கூடிய உற்பத்திகளை ஊக்குவித்தலுக்காக உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கி குறைந்த வருமானம் உள்ள மக்களுக்கு சுய வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கும் மேலதிக வருமான வழிகளை உருவாக்குவதன்மீது மக்களை ஈடுபடுத்தலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் சார்ந்த விபரங்கள் பின்வருமாறாகும்.

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	நடைபெற்ற திகதி	நடைபெற்ற பிரதேசம் மற்றும் மாவட்டம்	கலந்து கொண்டோர்களின் எண்ணிக்கை
தும்பு சார்ந்த உற்பத்தி (தவாசி தூரிகை)	2019/04/03-05	அடிப்பல, புத்தளம், அருனலு கப்ருக்க அமைப்பின் உறுப்பினர்கள்	22
	2018/06/19-2019/6/21	யோகியான , புத்தளம், திரிய சக்தி, கப்ருக்க சங்க உறுப்பினர்கள்	25
	2019/06/27-29	மொரகனே, அலங்காரே	20
	2019/07/30-2019/08/01	மீரிகம, கம்பகா	20

	2019/11/7-2019/11/9	துனுகன்னாவ தெங்கு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம்	25
	2019/10/16	திஹ கொடை மாத்தறை	26
விளக்குமாறு, துடைபம் உற்பத்தி	2019/03/28-29	தேவாலகம/ கேகாலை, உருலாதெனிய கப்ருக்க சங்கம்	20
	2019/07/17-2019/07/19	கந்தகடுவ புனர்வாழ்வு முகாம்	20
	2019/08/15-2019/08/17	சேனபுர புனர்வாழ்வு முகாம்	100
	2019/10/21-2019/10/23	கந்தகடுவ புனர்வாழ்வு முகாம்	100
	2019/10/30-2019/11/01	சேனபுர புனர்வாழ்வு முகாம்	100
கால் துடைப்பம் உற்பத்தி	2019/08/06-2019/08/08	கந்தகடுவ புனர்வாழ்வு முகாம்	100
அலங்காரப் பொருட்கள்	2019/06/12-2019/06/14	குருணாகல், மாஸ்பொத்த , திரிய சக்தி கப்ருக்க சங்கம்	20
கயிறு உற்பத்தி	2019/07/1-2019/07/02	மொணராகலை, மெதகம சுய தொழில் எக்கமுத்து கப்ருக்க சங்கம்	15

அட்டவணை 14 - பயிற்சி நிகழ்ச்சிகள்

உருவப்படம் 10: கந்தகடுவ புனர்வாழ்வு நிலையத்தின் பயிற்றுவிப்பில் ஈடுபடுகின்ற புனர்வாழ்வு பெறுநர்கள்

திகதி	நிகழ்ச்சித்திட்டம்	இடம்	கலந்து கொண்டோர்களின் எண்ணிக்கை
2019/07/01-02	கயிறு தயாரித்தல் - குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களின் பொருட்டு சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல	மெதகம, மொணரகலை	15
2019/07/0-05	தெங்கு சிர ட்டை சார்ந்த அலங்காரப் பொருட்கள்	வெல்லவாய, மொணராகலை	30
2019/07/30-2019/08/01	நார் மற்றும் நார் சோறுகள் சார்ந்த உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக	கம்பகா, மினுவன்கொடை	25

அட்டவணை 15 - நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்ட இடங்கள்

உருவப்படம் 11 - மொணராகலையில் நடாத்தப்பட்ட அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் புகைப்படங்கள்

2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் விபரங்கள்

மாவட்டங்களின் இளைஞர் சமுதாயத்தை இலக்காகக் கொண்டு அவர்களை சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியாக வலுவூட்டுவதற்காக இளைஞர் யுவதிகளை அபிவிருத்தி செயற்பாட்டில் பங்குகொள்ளச் செய்விப்பதற்கு நடாத்தப்பட்ட பின்வரும் கண்காட்சிகளில் பங்குபற்றச் செய்விக்கப்பட்டது. இந்த கண்காட்சிகளில் தவாஷி தூரிகை தயாரித்தல் மற்றும் தெங்கு சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட அலங்காரப் பொருட்களின் உற்பத்தி தொடர்பாக மக்களை அறிவுறுத்தப்பட்டது.

திகதி	கண்காட்சி	இடம்
2019/07/24-2019/07/27	என்டர்ப்ரயிஸஸ் சிறி லங்கா தேசிய கண்காட்சி	வலிசிங்க ஹரிஸ்சந்திர விளையாட்டு மைதானம் அநுராதபுரம்
2019/09/7-2019/09/09	என்டர்ப்ரயிஸஸ் சிறி லங்கா தேசிய கண்காட்சி	யாழ்ப்பாணம் துறையப்பா விளையாட்டு மைதானம்
2019/3/20-2019/09/24	ரஜரட்ட வசந்தய	இபலோகம

அட்டவணை 16 நடாத்தப்பட்ட கண்காட்சிகள் மற்றும் இடங்கள்

உருவப்படம் 12 அநுராதபுரம் என்டர்ப்ரயிஸஸ் சிறி லங்கா தேசிய கண்காட்சி

உருவப்படம் 13: யாழ்ப்பாணம் என்டர்ப்ரயிஸஸ் சிறி லங்கா தேசிய கண்காட்சி

1.10.2 உபகரணங்கள் மற்றும் முதலீட்டு உதவி வழங்குதல்

தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த சிறிய அளவிளான முறைசாரற்று மேற்கொள்கின்ற கைத்தொழில்கள் பல்வேறு துறைகள் சார்ந்து பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், இவற்றுக்கிடையில் பெரும்பாலானவைகள் கைத்தொழில் ஏற்றுமதிகளை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. தரத்துடன் கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதற்காக தெங்கு சார்ந்த உற்பத்தி துறை ஒழுங்கமைத்து, அந்தக் குழுக்களின் பொருட்டு தேவைக்கேற்ப உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டன. பாரம்பரிய கைத்தொழில்களுக்கு புதிய தொழில்நுட்பம் சேர்க்கப்படுவதற்காக குறைந்த வருமானம் பெறுவபர்களிடம் உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்குவதற்கும் இயந்திரங்களை சலுகை அடிப்படையில் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இலக்கம்	அமைப்புகள்/இடங்கள்	வழங்கிய உபகரணங்களின் வகை	அளவு
1.	திரிய சக்தி கப்ருக்க சங்கம் மாஸ்பொத்த	பென்ச் ட்ரில் பென்ச் க்ரயின்டர் பென்டன்ட் மோட்டர்	2 2 2
2.	திரு.கே.ருவன்	பென்ச் க்ரயின்டர்	1
3.	அருணலு கப்ருக்க கைத்தொழில் சங்கம், அடிப்பல, ஆரச்சிகட்டுவ	தூரிகை இடப்படும் உபகரணங்கள் தும்பு வெட்டும் உபகரணங்கள் கம்பி வெட்டும் உபகரணங்கள்	15 1 1
4.	அலங்கரே மொரகனே சங்கம்	தூரிகை இடப்படும் உபகரணங்கள் தும்பு வெட்டும் உபகரணங்கள் கம்பி வெட்டும் உபகரணங்கள்	20 01 01
5.	மொணராகலை சுய தொழில் எக்கமுத்து கப்ருக்க சங்கம்,மெதகம	கயிறு தயாரிக்கப்படும் உபகரணங்கள்	05
6.	திரிய சக்தி கப்ருக்க சங்கம், யோகியான, புத்தளம்	தூரிகை இடப்படும் உபகரணங்கள் தும்பு வெட்டும் உபகரணங்கள்	06 01
7.	பிரதேச செயலகம், திஹகொட	ட்ரிமர் இயந்திரங்கள்	02
8.	தெங்கு பயிர்ச் செய்கை சபை, வவுனியா	கயிறு தயாரிக்கப்படும் உபகரணங்கள்	02
		மொத்தம்	62

அட்டவணை 17: உபகரணங்கள் வழங்கிய இடங்கள்/ சங்கங்கள் மற்றும் அளவு

பிரிஸ்டல் நார் உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக பிரிஸ்டல் மற்றும் மெட்ரஸ் நார் உற்பத்தி செய்வதற்கு முடியுமயான உள்நாட்டில் மேம்படுத்திய தன்னியக்க மட்டைகளை பொருத்தும் தொழில்நுட்பத்துடன் கூடிய பிரிஸ்டல் நார்களை பெற்றுக்கொள்வதற்கு முடியுமான 07 இயந்திரங்களுக்கு முதலீட்டு சலுகை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சூழலுக்கு சேதங்களை ஏற்படுத்தும் உயர் தரத்திலான சிரட்டை கரி உற்பத்தி கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கு பொருத்தமான தொழில்நுட்பத்தை பெற்றுக் கொள்வதற்காக 10 கைத்தொழிலாளர்களின் பொருட்டு நிதி உதவி வழங்கப்பட்டது. கரி உற்பத்தி செய்கின்ற கைத்தொழிலாளர்களை தரத்துடன் கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதற்காக ஊக்குவித்தல் இதன்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

சிரட்டை ஓடுகள் விரயமாவதை தவிர்ப்பதற்காக அவற்றை சேர்க்கப்பட்டு பிரதிநிதியாளர் ஒரிவரிடம் ஒப்படைப்பதற்கு, மக்களை அறிவுறுத்தல் இலத்திரனியல் ஊடகம்மூலம் அறிவிப்பொன்றை பிரச்சாரம் செய்யப்பட்டது. இதற்காக மக்களை அறிவுறுத்துவதற்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலங்களில் வர்த்தக அறிவிப்புகள் இலங்கை வானொலி கூட்டுத்தாபனம்மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டது.

1.10.3 துன்கன்னாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம்

துன்கன்னாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் உற்பத்தி நடவடிக்கைகளை வலுவூட்டுவதற்காகவும் அதனை மாதிரி தும்பு அபிவிருத்தி நிலையமாக பேணிச்செல்வதற்காகவும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உலர்த்தும் மைதானம் விஸ்தரித்தல், பாதுகாப்பான இயந்திரங்களுடன்கூடிய பிரிஸ்டல் நார் பிரித்தெடுக்கும்பெட்டித் தொகுதி இயந்திரம், இந்த நிலையத்திடம் வருகை தருகின்ற கைத்தொழிலாளர்களிடம் அறிவை வழங்குவதற்கு தாபிக்கப்பட்டது. இந்த நிலையத்திடம் GMP சான்றழித்தல் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், தும்பு சார்ந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதேநேரம் தும்பு சார்ந்த முடிவுப் பொருட்களின் உற்பத்தி மற்றும் தெங்கு சார்ந்த ஏனைய உற்பத்திகள் தொடர்பான பயிற்சி கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக அதிகாரசபை மூலம் 2020 ஆண்டில் செயற்றிட்டத்தில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டது.

உருவப்படம் 14: துன்கன்னாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

1.10.4 விசேட கருத்திட்டங்கள்:

தெங்கு அபிவிருத்தி அதிகாரசைபை தெங்கு பயிர்ச் செய்யும் சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையில் தெரிவு செய்யப்பட்ட விசேட கருத்திட்டமாக யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் தாபிக்கப்பட்டு வரும் இரண்டாவது தெங்கு முக்கோணம் மேம்படுத்துவதற்கு 2019.08.10 தொடக்கம் 2019.08.12 வரை நிகழ்ச்சித்திட்டங்களை அந்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மாவட்டங்களின் அபிவிருத்தி விசேட கருத்திட்டம் மக்களுக்கு உரிமையாக்குவதற்காக நடாத்தப்பட்ட வைபவத்தின் போது தும்பு அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆய்வுகூடங்கள் இரண்டை மக்கள் மயப்படுத்தப்பட்டது.

2. தர நிர்வாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு

தர நிருவாகப் பணிகளை மேற்கொள்வது தொடர்பிலான வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி இருப்புகளின் பண்புசார் தரத்தை உறுதிப்படுத்தல், பல்வேறுபட்ட கேள்விதாரர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு பரிசோதனை வசதிகளை வழங்குதல் மற்றும் தெங்கு உற்பத்தியினை உள்நாட்டு சந்தைக்கு வழங்கும்போது பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் தெங்குசார்ந்த உற்பத்தியினை உயர் மட்டத்திற்கு பேணுவதற்கான ஆலோசனையை வழங்குவது தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் பிரதான பொறுப்புக்களாகும்.

இதற்கு அமைய இப் பிரிவின் பணிகள்;

1. **ஏற்றுமதிக்காக அனுப்பப்படும் உலர்த்திய தேங்காய் உற்பத்திகளைப் பரிசோதனை செய்தல் மற்றும் தரத்தை உறுதிப்படுத்தல்.**

   - உலர்த்திய தேங்காய்களின் நுண் உயிரியல் மற்றும் பௌதீக இரசாயன பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

   தெங்கு உற்பத்தித் துறையின் பிரதான உள்ளீடு சார்ந்த உற்பத்தி உலர்த்திய தேங்காய்க் கைத்தொழிலின் பிரதானமாக சிறந்த தரத்தில் நிருவகிக்கப்படுவதுடன் நாளாந்தம் உலர்த்திய தேங்காய் உற்பத்திகள் சகலதும் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. ஏற்றுமதியுடன் ஒப்பீடு செய்யும் போது இவ் உற்பத்திக்காக தரச் சான்றிதழை வழங்க இப் பரிசோதனைப் பெறுபேறுகள் பங்களிப்புச் செய்கின்றது.

   - தும்புத் துகள் சார்ந்த உற்பத்தி பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

2. **தெங்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடுவோர், ஏற்றுமதியாளர்கள் மற்றும் நுகர்வோருக்காக மேற்கொள்ளப்படும் சேவைகளாக இரசாயணப் பரிசோதனை சேவை, சலுகைக் கட்டண முறையின் கீழ் மேற்கொள்ளல்.**

   இலங்கை தர நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள தெங்குசார்ந்த உற்பத்திக்கான தரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நுண் உயிரியல் மற்றும் பௌதீக இரசாயணப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் இயலுமை தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவிடம் காணப்படுவதுடன், தெங்குக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களின் முன்னேற்றத்திற்காக துரித கதியில் பரிசோதனை சேவையினை வழங்க சகல சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. **உலர்த்திய தேங்காய் உற்பத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக நுண் உயிரியல், பௌதீக இரசாயணப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.**

   அதிகார சபையின் இரசாயன கூடத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளைத் தவிர உலர்த்திய தேங்காய் உற்பத்தித் தயாரிப்பு சார்ந்த உலர்ந்த மற்றும் நீர் மாதிரிகளை சேர்த்துக் கொண்டு அதனை பரிசோதனை செய்து பெறுபேறுகளை வழங்கி தெங்கு உற்பத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்தல் மற்றும் உற்பத்தியினை உயர் தரத்தில் பேணுவதற்காக பங்களிப்புச் செய்யப்படுகின்றது.

4. **தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் இரசாயன கூடத்திற்காக ISO17025 தரச்சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.**

5. தேங்காய் எண்ணெய் கைத்தொழிலின் சுகாதாரப் பாதுகாப்பினைப் பேணுதல் மற்றும் கட்டியெழுப்பும் நோக்குடன் தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் சுகாதாரப் பாதுகாப்பினை பரிசோதனை செய்வதன் மூலம் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களான கொப்பறா, உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் மற்றும் அதன் துணை உற்பத்தியான பிண்ணாக்கு இலங்கைத் தரத்திற்கு அமைவானதா என பரிசோதனை செய்தல்.
6. உள் நாட்டுச் சந்தையில் காணப்படும் கலப்புத் தேங்காய் எண்ணெய் அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் விலகல் தொடர்பாக நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகார சபை மற்றும் சுகாதார அமைச்சின் உணவு நிர்வாகப் பிரிவிடம் அறிவித்தல். தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் தரத்தினைப் பரிசோதனை செய்வதுடன், அடையாளம் காணப்பட்ட கலப்பு தேங்காய் எண்ணெய் விற்பனையாளர்கள் தொடர்பான விபரங்களை நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகார சபை மற்றும் உணவுப் பொருட்களுக்கான நிருவாக அதிகாரங்களைக் கொண்ட நிறுவனமான சுகாதார அமைச்சின் உணவு நிர்வாகப் பிரிவுக்கு வழங்கி, குறித்த நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு கலப்பு தேங்காய் எண்ணெய் பயன்பாட்டின் ஊடாக வாடிக்கையாளர்களை பாதுகாப்பதற்கான சேவைகளை வழங்குதல்.
7. தெங்கு சார்ந்த உற்பத்திகள் தொடர்பில் எழும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முறைப்பாடுகள் தொடர்பாக உற்பத்திப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.
8. தெங்கு சார்ந்த உற்பத்தியின் முக்கியத்துவம் தொடர்பாக அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள், கண்காட்சியில் பங்கேற்றல்.
9. உணவு சார்ந்த ஏனைய உற்பத்திகளின் பரிசோதனை சேவைகளை முன்னெடுத்தல்.
10. தற்போது இலங்கையில் தரங்களை இற்றைப்படுத்தல் மற்றும் தற்போது தரமற்ற தெங்குசார்ந்த உற்பத்திக்காக தரத்தை வழங்க இலங்கை தர நிறுவகத்துடன் இணைந்து வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
11. தெங்கு சார்ந்த உற்பத்தி கைத்தொழில் காணப்படும் இரசாயன கூட சேவையில் ஈடுபட்டுள்ள பணியாற்தொகுதிக்காக பயிற்சி வேலைத் திட்டங்களை நடாத்துதல்.

இதற்கு அமைய பண்புசார் தரம் மிக்க தெங்கு உற்பத்தியினை உருவாக்குவதும், அதற்கு அமைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு தெங்கு உற்பத்தியினை பரிசோதனை செய்தல், தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்சகல பணிகளும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டமிடலுக்கு அமைய மேற்கொள்ளப்படுவதுடன் 2019 ஆம் ஆண்டின் வருடாந்த முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

2.1 ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் தெங்கு உற்பத்தியின் தரத்தினை உறுதிப்படுத்தல்

2.1.1 தெங்கு உற்பத்தியின் ஏற்றுமதிக்கு முன்னர் நுண் உயிரியல் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் உறுதிப்படுத்தல்

தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்தியின் பரிசோதனைப் பணிகள் பிரதானமாக உலர்த்திய தேங்காய்க்காக மேற்கொள்ளப்படுகின்றது. உலர்த்திய தேங்காய் உற்பத்தி ஆய்வுகூடத்தில் இடம்பெறக்கூடிய நாளாந்த உற்பத்தி, சல்மனல்லா பரிசோதனைக்கு உட்படுத்தல், தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் நுண் உயிரியல் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய ஏற்றுமதிக்காக அனுப்பப்படும் சகல உலர்த்திய தேங்காய்களினதும் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் ஆய்வு கூடத்தில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும்.

2019 ஆண்டுக்காக நாளாந்த உலர்த்திய தேங்காய் உற்பத்தி 9500 மாதிரி இலக்குகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. மாதிரிகள் 10000 சல்மனல்லாவிற்காக பரிசோதனையை மேற்கொண்டு 2019 ஆம் ஆண்டில் இப்பரிசோதனைக்காக 105% ஆன முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. உலர்த்தப்பட்ட தெங்கு மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தல் அந்த உற்பத்தி கொள்ளளவு மீது தங்கியுள்ளது.



	2010	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019
மாதிரிகளின் எண்ணிக்கை	6532	10223	9318	6498	11609	9597	11265	7097	6060	10000
உற்பத்தி MT	28850	46620	41645	29200	50368	41795	51219	29557	24625	44081

உருவப்படம் 15 உலர்த்தப்பட்ட உற்பத்திகள் மற்றும் மாதிரிகள் கிடைக்கப்பெறுதல்

2018 ஆம் ஆண்டில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உலர்த்திய தேங்காய் உற்பத்தியில் 16 மாதிரிகள் சல்மனெல்லா நச்சு தாக்கியுள்ளதாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. விகிதாசாரமாக கருத்திற் கொள்ளும் போது முழுமையான நச்சுத் தன்மை 0.26%ஆகும். 2019 ஆம் ஆண்டில் நச்சுத் தன்மை மாதிரிகள் 09 ஆக காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் நுண் உயிரியல் பரிசோதனைக்குட்படுத்திய உலர்த்திய தேங்காய் மாதிரிகளின் சதவீதமாக மேற்கொண்டால் இது 0.09% ஆகும்.



உருவப்படம் 16 -செல்மொனெல்லா நச்சாதல் உலர்த்திய தேங்காயின் நாளாந்த மாதிரிகள்

ஆண்டு	2010	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019
நச்சுத் தன்மை கலந்த விகிதம்%	0.12	0.2	0.08	0.14	0.15	0.27	0.4	1.2	0.26	0.09

ஏற்றுமதிக்கு முன்னர் நுண் உயிரியல் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக உள்ளீடற்ற உற்பத்திகளில் முன்னுரிமை வழங்கப்படுவது தும்புத் துகள் சார்ந்த உற்பத்திகளாகும். 2018 ஆம் ஆண்டில் 9928 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் 1135 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ் 1135 மாதிரிகளில் 1373 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாதிரிகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது விண்ணப்பதாரிகளின் தேவைக்கு அமையவாகும். 2019 ஆம் ஆண்டில் தும்புச் சோறு சார்ந்த உற்பத்தி வருடாந்த இலக்கிற்கு இணைவாக அதிக அளவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் முன்னேற்றம் 114% ஆக பதிவாகியுள்ளது. இம் மாதிரிகளில் சல்மொனெல்லா மற்றும் ஈக்கொலின் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகளில் சல்மொனெல்லா நச்சுத் தாக்கம் பதிவாகியுள்ளதுடன் எந்தவொரு மாதிரியும் ஈக்கோலை பக்றீரியாவிற்கான தர எல்லைகளைத் தாண்டவில்லை.



உருவப்படம் 17. தும்புச்சோறு சார்ந்த உற்பத்திகளின் பரிசோதனைகள்

2.1.2 உலர்த்திய தெங்கு உற்பத்தியின் ஏற்றுமதிக்கு முன்னரான பௌதீக இரசாயணப் பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் உறுதிப்படுத்தல்

பௌதிக மற்றும் உணர்வு ரீதியிலான பரிசோதனைகளாக உலர்த்திய தேங்காயின் நிறம், அளவு, ஈரலிப்பு, சுவை, நறுமணம், மூலப்பொருள், கொழுப்பு ஆகியன பரிசோதனைகள் முக்கியமாக மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய 2018 ஆம் ஆண்டில் 6087 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் 10121 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இம் மாதிரிகள் 10121 இல் மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்தப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 80968 ஆகும். 2019 ஆம் ஆண்டு இலக்குக்கு இணைவாக இதன் முன்னேற்றம் 107% ஆகும்.



உருவப்படம் 18 - நாளாந்த உலர்ந்த தெங்கு உற்பத்திகளின் பரிசோதனைகள்

2018 ஆம் ஆண்டில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உலர்த்திய தேங்காய் மாதிரிகள் 6087 இற்குள் 482 மாதிரிகள் அதாவது 7.9 % பௌதிக அடையாளங்களில் குறைபாடுகளைக் காண்பித்ததுடன் 2019 ஆம் ஆண்டில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகள் 10121 இல் 1072 மாதிரிகள் அதாவது 11 % குறைபாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு ஏற்ப பௌதீக அம்சங்கள் உரிய தரத்தில் இன்மை 2019 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. இவ்வாறு இலங்கைத் தரத்துடன் இணங்காத மாதிரிகளுக்கடையில் கூடுதலான விகிதாசாரமாக 44% நிறத்தின்படி தரத்திற்கு உட்படாமைக்கானது ஆகும். தரக்குறைபாடுகள் பற்றிக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

தரம்	இணக்கம் வழங்கப்படாத மாதிரிகள்	
	எண்ணிக்கை	%
வகைப்படுத்தல்	366	34
வர்ணம்	476	44.4
கழிவான	15	1.4
ஈரளிப்புக் கொண்ட	51	5
கருகிய துண்டுகள்	426	40
பொசுங்கிய மணம்	398	37
புகை மணம்	6	0.6
வெளிக் கழிவுப் பொருட்கள்	51	5
இணைகள்	273	26
எண்ணெய் சேமிப்பு	7	0.7
எண்ணெயுடன் காணப்படல்	6	0.6
இனிப்புச் சுவை	46	4.3
சாத்தியமான வாசனை	2	0.2

அட்டவணை 18 அளவுருக்களுக்கு இணங்காமை
(ஒரு சில மாதிரிகள் தொடர்பில் அதன் தரம் மற்றும் இணக்கங்கள் எட்டப்படவில்லை.)

2.2 தெங்கு சார்ந்த உற்பத்திப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் சேவையினை முன்னெடுத்தல்

உள்நாட்டு உற்பத்தியாளர்களின் பல்வேறுபட்ட தெங்கு உற்பத்திப் பகுப்பு ஆய்வுகளை மேற்கொள்ளல், சேவையாக அதனை முன்னெடுத்தல் போன்றன தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. நுண் உயிரியல் பரிசோதனைகள், இரசயாணப் பரிசோதனைகள், பௌதிகப் பரிசோதனைகள் மற்றும் உணர்வு ரீதியிலான பரிசோதனைகள் இதன் கீழ் குறிப்பிடப்படுகின்றன. இச்சேவையினை நியாய விலைக்கு வழங்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளுக்கு தேவையான அளவுருக்களுக்கு அமைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்கள், நுகர்வோர், சிறிய, நடுத்தர மற்றும் பாரிய வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள் போன்ற எந்த ஒரு குழுவிற்காகவும் தெங்கு சார்ந்த உற்பத்திப் பரிசோதனை சேவைகள் வழங்கப்படுகின்றன.

உலர்த்தப்பட்ட தேங்காய் உள்ளீடு அடிப்படையில் கொழுப்பு ஓரளவு நீக்கப்பட்ட தேங்காய், கொப்பறா, தேங்காய் நார், தேங்காய் எண்ணெய், பிண்ணாக்கு, தும்புத் துகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் தேங்காய்ப் பால் மற்றும் பால் சார்ந்த ஏனைய உற்பத்திகள் போன்றன பல்வேறுபட்ட தெங்கு உற்பத்திப் பொருளாக இலங்கை தரத்திற்கு அமைய பரிசோதனை செய்யும் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காகத் தேவையான நவீன இரசாயன கூட உபகரணங்கள், தர நிருவாகப் பிரிவில் காணப்படுவதுடன் துரித கதியில் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளும் பணிகள் தர நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

தரத்துடன் கூடியதேங்காய் உற்பத்திகளை தயாரித்தல் மற்றும் பரிசோதனை செய்து அதன் நிலைமைகள் தொடர்பாக புரிந்துக்கொள்வதற்கு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கும், இலங்கையின் அடையாளத்தைப் பாதுகாக்கக் கூடியவாறு தரத்தில் உயர்ந்த தெங்கு உற்பத்தியினை தொடர்ந்தும் வெளிநாட்டு சந்தைக்கு அனுப்பும் வகையில் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் மேற்கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட தொகுதிகளுக்காக 15% ஆன கழிவுக் கட்டணத்தின் கீழ் இப்பரிசோதனைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்தி பிரதானமாக உட்படுத்தப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டில் 926 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 2019ஆம் ஆண்டில் மாதிரிகள் 988 பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள 925 மாதிரிக்கு இணைவாக இதன் முன்னேற்றம் 107% ஆகும். இம் மாதிரிகள் 988 இல் மேற்கொள்ளப்பட்டுள்ள முழுமையான பரிசோதனைகளின் எண்ணிக்கை 1666 ஆகும். 2019 ஆம் ஆண்டில் தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்திகளில சல்படயொக்சைற் மற்றும் அப்லடொக்சின் பரிசோதனைக்காக மாத்திரம் 667 உலர்த்திய மாதிரிகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. தேங்காய் எண்ணெய் மாதிரிப் பரிசோதனைகள் 2018 ஆம் ஆண்டுக்கு இணைவாக குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளது. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஏனைய மாதிரி வகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.



உருவப்படம் 19 தெங்கு சார்ந்த உற்பத்திகளின் பரசோதனை சேவைகள்

வருடம்	உலர்த்திய தேங்காய் (மாதிரி)	பிண்ணாக்கு (மாதிரி)	தேங்காய் எண்ணெய் (மாதிரி)	கொப்பறா (மாதிரி)	ஓரளவு கொழுப்பு நீக்கப்பட்ட உலர்த்திய தேங்காய் (மாதிரி)	Coconut spread(மாதிரி)	தேங்காய் கிறீம்/ (மாதிரி)	மாவாக மாற்றப்பட்ட தேங்காய் (மாதிரி)	தேங்காய் பால்	தெங்கு அல்லாத மாதிரி	உலர்த்திய தேங்காய் மாதிரி மற்றும் அபல்டொக்சின்	Row coconut flaks
2014	122	5	161	4	81	--	11	--	--	05	710	-
2015	35	10	158	3	105	01	11	01	--	01	214	-
2016	58	2	191	1	112	--	4	--	--	--	374	-
2017	42	-	332	-	121	-	07	-	--	-	366	-
2018	13	-	344	-	141	-	01	--	--	07	417	02
2019	18	1	213	1	66	--	5	--	2	15	667	--

2.3.1 ISO தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டுப் பணிகள்

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் வழங்கப்படும் பரிசோதனைகளுக்காக சர்வதேச வரவேற்புக் கிடைக்கக் கூடியவாறு மற்றும் பரிசோதனைப் பணிகளை சரியாக, முறையாக மற்றும் கிரமமாக மேற்கொள்வதற்காக ISO17025 தராதர அங்கீகாரத்திற்கு உரியதான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு ஏற்ப வருடா வருடம் உபகரணங்களைக் கிரமமாக பேணுவது சர்வதேச மற்றும் உள்நாட்டு Inter laboratory மற்றும் Intra laboratory தொழில்சார் திறமை மதிப்பீட்டுப் பரிசோதனைகளுக்காகத் தோற்றியுள்ளதுடன் திருப்திகரமான மட்டத்தில் இது காணப்படுகின்றது.

SLAB
Certificate of Accreditation
Sri Lanka Accreditation Board for Conformity Assessment
hereby declares that
Chemical Laboratory of Quality Control and Quality Assurance Division
Coconut Development Authority
having being found to comply with the accreditation criteria for testing/calibration laboratories as described in ISO / IEC 17025 :2005,has been accredited as a testing laboratory under the field of
Chemical Testing
and has been assigned the accreditation number
TL 030-01
This certificate is issued on 12 June 2018 and is valid until
30 November 2020
The accreditation was granted for the first time on 12 June 2012
The scope and conditions of accreditation are specified in the Schedule of Accreditation bearing the accreditation number appearing in this certificate.
Director / CEO
Sri Lanka Accreditation Board for Conformity Assessment
Colombo, Sri Lanka

உருவப்படம் 20 SLAB சான்றிதழ்

தேங்காய் எண்ணெய் பரிசோதனை முறைகளுக்காக தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்பு இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவினால் இலங்கையின் தராதர அங்கீகார சபையினால் வழங்கப்படும் ISO17025 தரச் சான்றிதழ், 2012 ஆம் ஆண்டில் எட்டப்பட்டதுடன் அது 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட மேற்பார்வை பரிசோதனைகளில் சித்தி அடைந்து 2020 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை தர அங்கீகாரம் நீடிக்கப்பட்டுள்ளது.

SLAB
Certificate of Accreditation
Sri Lanka Accreditation Board for Conformity Assessment
hereby declares that
Microbiology Laboratory of Quality Control and Quality Assurance Division
Coconut Development Authority
having being found to comply with the accreditation criteria for testing/calibration laboratories as described in ISO / IEC 17025 :2005,has been accredited as a testing laboratory under the field of
Biological Testing
and has been assigned the accreditation number
TL 030-02
This certificate is issued on 28 October 2018 and is valid until
30 November 2020
The accreditation was granted for the first time on 28 October 2015
The scope and conditions of accreditation are specified in the Schedule of Accreditation bearing the accreditation number appearing in this certificate.
Director / CEO
Sri Lanka Accreditation Board for Conformity Assessment
Colombo, Sri Lanka

உருவப்படம் 21 SLAB சான்றிதழ்

தேங்காய் பால் சார்ந்த உற்பத்திகள் மற்றும் தேங்காய் எண்ணெயில் உள்ள நுண்உயிரியல் அளவுருக்களுக்கான அங்கீகரிப்பு பெற்றுக்கொள்வதற்காகவும் நீரின் இரசாயன அளவுருக்களின் பொருட்டு அடிப்படை அங்கீகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக இலங்கை அங்கீகரிப்புச் சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெறவுள்ளது. இதன் மேற்பார்வை பாரிசோதனைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு பிரச்சினைகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.

2.3.2 பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்

தர நிருவாகப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ISO அங்கீகாரத் தரத்தின் நடவடிக்கைகளுக்காக காலோசிதமாக திருத்தம் செய்யப்பட்டுள்ள தெங்கு உற்பத்தி பரிசோதனை முறைமைகளின் பொருட்டு தேவையான பயிற்சி இரசாயன கூடத்தின் ஊழியர்களுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வெளி இரசாயன கூடங்களின் ஊழியர்களுக்காக தரநிர்வாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. வருடாந்த திட்டங்களுக்கு அமைய முன்னேற்றம் பின்வருமாறாகும்.

	பயிற்சி வேலைத் திட்டங்கள்	பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சி நடாத்தப்பட்ட நிறுவனம்
1	மனித வள மேம்பாடு	01	கொழும்பு வணிக மேலாண்மை பள்ளி
2	கழிவு நீர் சுத்திகரிப்பு அறிமுகம்	01	CIDA
3	பாலியரோமடிக் ஹைட்ரோகார்பன்களின் பகுப்பாய்வு குறித்த பட்டறை (PAH) மூலம் தேங்காய் எண்ணெயில் HPLC (PAH) மூலம் தேங்காய் எண்ணெயில்	06	களனியா பல்கலைக்கழகம்
4	ஒழுங்குமுறை முகவர் மற்றும் தேசிய அங்கீகார அமைப்பு இடையே பயனுள்ள ஒத்துழைப்பின் நன்மைகள் குறித்த பட்டறை	01	இலங்கை அங்கீகார வாரியம்
5	Scix 2019 The Great Exchange	01	01 அமெரிக்கா
6	பயிற்சி ISO/IEC 17025:2017 ஆய்வக மேலாண்மை அமைப்புகளின் உள் தணிக்கை	01	இலங்கை அங்கீகார வாரியம்
7	ஆய்வக சுத்தம் குறித்த பயிற்சி & GLP	04	தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ITI)
8	ஆய்வக தர மேலாண்மை அமைப்பின் ஆவணம் படி ISO/IEC 17025:2017	03	இலங்கை அங்கீகார வாரியம்

அட்டவணை 19 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தல்

2.4. ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படும் தெங்கு உற்பத்திக் கைத்தொழிலில் உள்ள தரத்தினைப் பாதுகாத்தல்.

உலர்த்திய தெங்கு உற்பத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக நுண் உயிரியல் மற்றும் பௌதீக பரிசோதனைகளை மேற்கொள்ளல், கைத்தொழில்சாலை பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைப் பங்களிப்பினை வழங்குதல் என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஆகும்.

2019 ஆம் ஆண்டில் 577 களப் பரிசோதனைகளை நடாத்த முடிந்துள்ளது. உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய பரிசோதனைகளை மேற்கொள்ளும் பணிகள் அதிகரித்துள்ளமையினால் 2019 ஆம் ஆண்டு இலக்கிற்கு இணைவான முன்னேற்றம் 115 % ஆகும்.

உலர்த்திய தேங்காய் உற்பத்தித் தரத்தை விருத்தி செய்வதற்காக நுண் உயிரியல் பரிசோதனைகளை மேற்கொள்ள 2018 ஆம் ஆண்டிற்காக 259மாதிரிகள் என்பதுடன், 2019 ஆம் ஆண்டிற்காக 411 மாதிரகளாகும். இவ் 411 மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முழுமையான பரிசோதனைகளின் எண்ணிக்கை 1233 ஆகும். 2019 ஆம் ஆண்டின் இலக்கிற்கு இணைவாக முன்னேற்றம்110%ஆகும். ஆண்டின் பிற்பகுதியில், தேங்காய் பால் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது

மேலும் உலர்த்திய தேங்காய் உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் தண்ணீர் உரிய தரத்தில் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் பரிசோதனை மேற்கொள்வதற்காக அந்நீரில் நுண் உயிரியல் மற்றும் இரசாயனப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக 198 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் இலக்கிற்கு இணைவாக முன்னேற்றம் 99 %ஆகும்.

2.5.தேங்காய் எண்ணெய் கைத்தொழிலைக் கட்டியெழுப்புதல்

2.5.1 கலப்புத் தேங்காய் எண்ணெய் தொடர்பான வர்த்தக சந்தை மேற்பார்வைகளை மேற்கொள்ளல்

உணவாக தேங்காய் எண்ணெயில் உள்ள சுகாதார தரம் தொடர்பாக மற்றும் அதன் உற்பத்தியின் தரத்திற்கு அமைய உற்பத்திகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களைப் போன்று தரத்தில் குறைவு இன்றி, சந்தைக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டு தர நிர்வாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் பரிசோதனைகள் உட்பட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கலப்பு தேங்காய் எண்ணெய் தொடர்பாக பெறப்பட்டுள்ள பகுப்பாய்வுப் பெறுபேறுகளுக்கு இணங்க சுகாதார அமைச்சு மற்றும் நுகர்வோர் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மூலம் சுத்தமான தேங்காய் எண்ணெய்காக கலப்புத் தேங்காய் எண்ணெய் வர்த்தகத்தை மேற்கொள்ளும் வர்த்தக நிலையங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் மாவட்ட அடிப்படையில் சந்தையில் காணப்படும் தெங்கு மாதிரிகளை சேகரித்து அவற்றை கலப்பு தேங்காய் எண்ணையா என்பது குறித்து பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கான ஆய்வுகளை தொடர்ச்சியாக நடத்தும் பணிகள் 2019 ஆம் ஆண்டில் மேற்கொளள்ப்பட்டுள்ளதுடன் சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான சகல வர்த்தக நிலையங்களை தழுவக் கூடியவாறு விரிவான அடிப்படையில் இம்மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் 100 மாதிரிகள் பரிசோதனைகள் செய்யப்பட்டு கலப்புத் தேங்காய் எண்ணெய் 39% உள்ளதாக இனங்காணப்பட்டதுடன், இதற்கமைய 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான மாதிரி அளவில் 80% விகிதாசாரம் கலப்புத் தேங்காய் எண்ணெயாக பதிவாகியுள்ளது.

தேங்காய் எண்ணெய் கலக்காத போதிலும், தரம் மற்றும் அங்கீகாரமற்ற தேங்காய் எண்ணெய் வர்த்தக நிலையங்களைச் சார்ந்து காணப்படுவதாக பெறுபேறுகள் மூலம் தெரியவந்துள்ளது. இதற்கமைய கொழுப்பு நீக்கப்பட்ட அமில அளவின் தரம் மற்றும் இணங்காமையின் அடிப்படையில் 50% உம், அயடின் பெறுமதி இணங்காத அடிப்படையில் சிறந்த பண்புசார் தன்மையினை விட குறைந்த தேங்காய் எண்ணெய் 78% சந்தையில் காணப்படுவதாகப் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

2.5.2 தேங்காய் எண்ணெய் கைத்தொழிலின் தரத்தை மேமப்டுத்தல்

தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் தரத்திற்கு அமைய சிறந்த தரத்தைப் பேணுவதற்காக தேங்காய் எண்ணெய் ஆலை சார்ந்த தர நிர்வாக வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் மூலப்பொருளான கொப்பறா உரியவாறு காணப்படுகின்றதா என்பதையும், உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் சிறந்த தரத்தில் காணப்படுகின்றதா என்பதையும், தேங்காய் எண்ணெயாக மாற்றுவதற்கான செயற்பாடுகள் வினைத் திறனுடன் மேற்கொளள்ப்படுகின்றதா என்பது குறித்தும் ஆய்வுக்கு உட்படுத்துவதற்காக முறையாக கொப்பறா, தேங்காய் எண்ணெய் மற்றும் பிண்ணாக்கு மாதிரிகள் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் சார்ந்ததாக சேகரித்து பரிசோதனைப் பெறுபேறுகள் வழங்கப்படடுள்ளன. இதற்கமைய 2019 ஆம் ஆண்டிற்காக 50 தேங்காய் எண்ணெய் மாதிரிகளும், பிண்ணாக்கு மாதிரிகள் 24 உம் பரிசோதனைக்கு

உட்படுத்தப்பட்டது. பொலன்னருவை, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் காலி போன்ற மாவட்டங்களில் அமைந்துள்ள தேங்காய் எண்ணெய் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் இதற்கேற்ப பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், தரங்கள் மற்றும் அதற்கு இணங்காத தேங்காய் எண்ணெய் 52%, (2018 28%) உம், பிண்ணாக்கு 78% (2018-79%) உம் பதிவாகியுள்ளது. இதன் தரம் மற்றும் இணங்காமை தொடர்பில் செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவின் ஊடாக உற்பத்தியாளர்கள் அறிவுறுத்தப்பட்டதன் பயன்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

2.6 செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் நடைமுறைகளுக்கு ஏற்புடையதாக தெங்கு உற்பத்தி பகுப்பாய்வு

செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவின் தேவைக்கு ஏற்றவாறு நாளாந்தம் பரிசோதனை செய்கின்ற அடிப்படையில் சுத்தமான தேங்காய் எண்ணெய் மற்றும் தும்புச் சோறு மாதிரிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. சுத்தமான தேங்காய் எண்ணெய் மற்றும் தும்புச் சோறு 55 மாதிரிகளைப் பரிசோதனைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு அதில் மொத்த மாதிரிகளின் பரிசோதனையின் முன்னேற்றம் 100 %ஆகும். 139 தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், அதன் முன்னேற்றம் 116 ஆகும். தும்பு சோறு கூறுகள் 111 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், மாதிரி பரிசோதனையின் முன்னேற்றம் 93% ஆகும்.

அதன்படி 139 தேங்காய் எண்ணெய் மாதிரிகளில் இலவச கொழுப்பு அமில அளவு தரம் மற்றும் இணங்காமை மீது 38% ம் அயடின் பெறுமதி இணங்காமை மீது அதாவது 20% மற்றும் அப்டொக்சின் தரம் மற்றும் இணங்காமை மீது 11% பதிவாகியுள்ளது.

துன்கன்னாவ இரசாயனகூடத்தில் உள்ள ஆய்வக வசதிகளில், தும்புநார் சாா்ந்த உற்பத்திப் பொருட்கள் பரிசோதிக்கப்பட்டதோடு 147 மாதிரிகளை பரிசோதனை செய்து 123% என்ற வகையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

63 தேங்காய் பால் மாதிரிகளை பரி சோதனை செய்யப்பட்டுள்ளதுடன், முன் னேற்றம் 79% ஆகும். மாவாக்கப்பட்ட தேங்காய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், 08 மாதிரிகளை பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், முன்னேற்றம் 67% ஆகும்.

ஏனைய வெளிச் செயற்பாடுகள்

1. அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களுக்கான பங்களிப்பு

வேலைத்திட்டங்கள்	நடாத்தப்பட்ட நிறுவனம் மற்றும் இடம்	திகதி
1. தரமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் நுகர்வு குறித்த மாவட்ட அளவிலான செயலமர்வு	கம்பகா	**2019/01/29**
	களுத்துறை	**2019/02/01**
	தம்புள்ள	**2019/02/08**
	காலி	**2019/02/21**
	குருணாகல்	**2019/02/21**
	மாத்தறை	**2019/02/22**
	சிலாபம்	**2019/02/28**
2. பொதியுடன்கூடிய தேங்காய் எண்ணெய் பொருட்டு அதிகார சபையின் சான்றிதழ் வழங்குதல்	தெங்கு அதிகார சபை	**2019/01/03**
3. தரத்துடன்கூடிய தேங்காய் எண்ணெய் பயன்பாட்டினால் சுகாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம்	SLIDA	**2019/01/25**
4. தேங்காய் எண்ணெயின் தரம் தொடர்பாக ஒலிப்பதிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம்	சிருத்தா ரூபவாகினி அலை வரிசை	**2019/02/01**

5. கன்னி தேங்காய் எண்ணெயின் உற்பத்தி மற்றும் தர உறுதி குறித்த தொழில்நுட்ப பரிமாற்ற பட்டறை	இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை	**2019/04/03**
6. தேங்காய் எண்ணெயின் தரம் தொடர்பான கூட்டம்	நுகரவோர் அதிகார சபை	**2019/07/15**

அட்டவணை 20 அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள்

2. பட்டப்படிப்பை முடிக்க தொழில்நுட்ப பயிற்சிற்காக(Industrial Training) சந்தர்ப்பம் வழங்கல்

பயிற்சி	**பயிற்சி**	**பயிற்சி**
நுண்ணுயிரியல் மற்றும் இரசாயன சோதனை தொடர்பான பயிற்சி	ஊவ்வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	2019 ஒக்டோபர் (இரண்டு பேர்)
	களனிய பல்கலைக்கழகம்	2019 ஒக்டோபர் (இரண்டு பேர்)
	வேதியியல் நிறுவனம்	2019 பெப்ருவரி (ஒருவர்)

அட்டவணை 21 - அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள்

தர நிருவாகப் பிரிவின் மொத்த முன்னேற்றம் மற்றும் வருமானம் ஈட்டல்

2019 ஆம் ஆண்டிற்குள் மொத்த மாதிரிகள் 23,575 இனைப் பரிசோதித்துள்ளதோடு 98,703 மாதிரிகளுக்கு பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. வருடாந்த வருமானம் ஈட்டல் ரூ. 20.12 மில்லியன் ஆகும்.

3. விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

2019 ஆம் ஆண்டில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்திய திட்டங்களை எய்துக்கொள்வதற்காக ஆண்டு முழுதும் தொடர்ச்சியாக தமது பங்களிப்பை வழங்கிய விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவு தெங்கு கைத்தொழில் துறையில் விளைவுத்திறனை அதிகரிப்பதற்காக பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளது. இதன்மூலம் 2019 ஆம் ஆண்டு இறுதியில் ஒட்டுமொத்த இலங்கையில் தெங்கு கைத்தொழிலின் ஏற்றுமதி வருமானம் எதிர்வு கூறல்களையும் விஞ்சி அதகிரித்துக்கொள்வதற்கு இயன்றதுடன் அது இது வரை பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதி வருமானமான ரூபா. பில்லியன் 109 அல்லது அமெரிக்க டொலர் மில்லியன் 610 வரை மேலும் அதிகரித்துக் கொள்வதற்கு இயன்றமை தெங்கு சார்ந்த ஏற்றுமதி துறையில் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். இதன்போது எமது சேவைபெறுநர்கள் அடங்கலாக தெங்கு கைத்தொழில் துறையின் பல்வேறு தரப்புகளின் வளர்ச்சிக்கு சாதகமான சந்தை தகவல்கள் மற்றும் தரவுகள், கொள்வனவாளர்கள், விற்பனையாளர்கள் கண்டறிவதற்கான சேவைகளையும் புதிய சந்தை செல்நெறிகள் தொடர்பான தகவல்களையும், ஏனைய சேவைகளை வினைத்திறனாகவும் வழங்குவதற்கு விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு 2019 ஆம் ஆண்டில் விசேட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளது.

2019 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தின்படி முன்னெடுக்கப்பட்ட பிரதான பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தெங்கு சார்ந்த உற்பத்திக்காக சர்வதேச புதிய சந்தைகள் மற்றும் கொள்வனவாளர்களை அடையாளம் காணுவதன் மூலம் தெங்குக் கைத்தொழிலின் ஏற்றுமதி வருமானத்தை விருத்தி செய்யும் நோக்குடன் தும்பு மற்றும் செய்கை முறைகள் தொடர்பில் ஜேர்மனில் எசன்சில் நடைபெற்ற IPM கண்காட்சி, மெக்ஸிகோவில் இடம்பெற்ற IPM/OPF பூங்காவனச் செய்கை கண்காட்சி, ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற தெங்கு உள்ளீடு சார்ந்த ife கண்காட்சி, தென்னாபிரிக்கா ஜொஹெனர்ஸ்பேர்கில் நடைபெற்ற SAITEX கண்காட்சி, பிரேசில் நாட்டில் நடைபெற்ற APAS கண்காட்சி, அவுஸ்திரேலியா சிட்னியில் நடைபெற்ற Fine Food கண்காட்சி, பிரான்ஸ் பாரிஸில் நடைபெற்ற Food Ingredients Europe கண்காட்சி மற்றும் சர்வதேச வர்த்தக கண்காட்சிகளுக்காக ஏற்றுமதியாளர்கள்/ உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கு அனுசரணை வழங்கப்பட்டு அவர்களுடன் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை கலந்து கொள்ளல்.
- வர்த்தகசபையின் உதவியுடன் வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் உலக சந்தையில் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான புதிய வாய்ப்புகளை அடையாளம் காணும் நோக்கத்துடன் B2B கலந்துரையாடல்களை நடாத்துதுதல் மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை பயன்படுத்தி உணவு உற்பத்தி செயற்பாடுகளை (demonstrations) மேற்கொள்ளுதல்
- தெங்கு தொழிற் துறையினை மேற்பார்வை செய்தல் மற்றும் வசதிகளை அமைத்துக் கொடுத்தல் - ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தேங்காய் தோட்டங்கள் மற்றும் இடைத்தரகர்களின் பதிவு.
- தெங்கு மற்றும் இளநீர் ஏற்றுமதிக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் தற்காலிக ஏற்றுமதிக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
- தெங்கு சார்ந்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மேற்பார்வை பணிகளை மேற்கொள்ளல்.
- வர்த்தகப் பிணக்குகளைத் தீர்த்தல்.
- தேங்காய் மற்றும் கொப்பறா ஏல விற்பனையினை நடாத்துதல்.
- நாளாந்தம் தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த சந்தை வலை கணக்குகளை வகைகளை பத்திரிக்கைக்கு வழங்குதல்.

- தெங்கு சார்ந்த உற்பத்தி, ஏற்றுமதி / இறக்குமதி அளவு, ஏல விற்பனை விலைகள், உலக சந்தையில் தெங்கு சார்ந்த விலைகளை உள்ளடக்கி வாராந்த அறிக்கை, மாதாந்த அறிக்கை மற்றும் 2018 ஆம் ஆண்டிற்காக இலங்கை தெங்கு புள்ளிவிபர அறிக்கையை வெளியிடல்
